தினமலர்
DINAMALAR

01-01-2016 பக்கம்.எண்: 6

## சுற்றுச்சூழலை சிந்திக்க வேண்டும்



**தியாகராஜன்**, தொழிலதிபர்

நீராதாரம், இயற்கை வளங்களை பாதுகாக்கும் நிறுவனங்களுக்கு மக்களின் ஒத்துழைப்பு அவசியம். மதுரையின் மாண்பை, புராதன, வரலாற்று பெருமையை மற்றவர்கள் தெரிந்து கொள்வதற்காக இங்கே வருகின்றனர். நம் சந்ததிகளுக்கு அதன் பெருமையை உணர்த்த வேண்டும். அறிவு, திறமைமிக்க இளைஞர்கள் மதுரையிலேயே தங்கி வேலை செய்யும் சூழ்நிலை உருவாக வேண்டும்.

## எட்டும் தூரத்தில் வெளிநாடுகள்



**சுந்தர்**, தலைவர், டிராவல் கிளப்

புராதனமான இந்நகருக்கு பல இடங்களில் இருந்
மக்கள் வருகிறார்கள். ஆடை கட்டுப்பாடு, ஜல்லி
கட்டு தடை போன்ற விஷயங்களும் தொடர்கி
றன. இரண்டாம் நிலை நகரங்களின் மேம்பாட்டிற்
அரசு அக்கறை எடுத்துள்ளது. எனவே மதுரையி
சுற்றுலா மேம்படும் என்ற நம்பிக்கை உள்ளது
மதுரையில் இருந்து மலேசியா, சிங்கப்பூ
மற்றும் வளைகுடா நாடுகளுக்கு விமான சேவை
களை துவக்க வேண்டும். இதனால் வெளிநாட்
சுற்றுலா பயணிகள் மதுரைக்கு நேரடியாக வரு
வாய்ப்பு கிடைக்கும்.

THE HINDU

01-01-2016 Pg No: 5

# "Mute, inglorious Milton" of Madurai remembered

S. ANNAMALAI



Arimalam S. Padmanabhan of Puducherry addressing the birth centenary celebration of Tamil musicologist V.K.P. Sundaram at Thiagarajar College in Madurai on Wednesday.— PHOTO: R. ASHOK

**MADURAI:** The birth centenary of a "mute, inglorious Milton" of Madurai, Veeranan Kamatchi Paramasivam Sundaram, was celebrated at Thiagarajar College here on Wednesday with a lecture by Arimalam S. Padmanabhan, musicologist from Puducherry.

V.K.P. Sundaram, who was born in Combai in 1915, lived in Pasumalai, Madurai, till his death on March 9, 2003. He did exhaustive research in musicology to establish the ancient nature of Tamil music over other forms of music.

His works include 40 books and a four-part 'Tamil Isai Kalaikalanjiyam' (Encyclopaedia of Tamil Music) published by Bharathidasan University.

In his tribute to Sundaram, Nirmal Selvamony of Madras Christian College says, "No one has contributed to Tamil musicology as much as Prof. Sundaram has." Dr. Padmanabhan described him as the "wisest among the wisest," who made seminal contribution to study and understanding of Tamil music after Abraham Pandithar.

Sundaram was the one who pegged the beginning of Tamil music history at Tholkappiam.

Prof. Nirmal's tribute recalls how Sundaram gave "special attention to taalam, which has resulted in novel musicological interpretation of passages that were hitherto considered merely 'literary'." Dr. Padmanabhan said that Sundaram established that present day raga 'Mohanam' was the first music that originated from Mullai landscape of ancient Tamils. 'Parai' was the first percussion instrument that came from Kurinji landscape.

> 'Sundaram established that present day raga 'Mohanam' was the first music that originated from Mullai landscape of ancient Tamils '

A tribute to Sundaram from Srinivasan Pichumani of the University of Michigan read: "The 82-year-old Dr. Sundaram has cleared many obscurities and errors with regard to Tamil musicology.....and clearly established the basic musical scale of ancient Tamils as 'Chempalaippan' or the present raga 'Harikambodhi'."

Hari K. Thiagarajan, secretary, Thiagarajar College, said that the centenary celebration was an opportunity to learn about a great son of the soil. G. Gnanasambandan, Professor Emeritus, explained the rich contribution of Sundaram to Tamil musicology.

Sundaram began his career as a teacher at Teacher Training Institute, Pasumalai.

Later, he served at The American College, Madurai Kamaraj University and Tamil Nadu Theological Seminary. He learnt Tamil under Somasundara Bharathi and music under Sankarasivam of Ramanathapuram.

He was a recipient of Tiruvalluvar Award, Raja Muthiah Chettiar Award and Isai Kalai Selvar Award. He was writing a research paper an hour before his death.

THE NEW INDIAN EXPRESS

06-01-2016 Pg No: 8



**WRAPPING IT UP IN STYLE** Thiagarajar College students sporting dhotis on the campus to mark Dhoti Day, in Chennai on Wednesday. Politicians, activists and students observed the day, which aims to support weavers of the garment by buying their products | P RAVIKUMAR


தினமலர்
DINAMALAR

10-01-2016 பக்கம்.எண்: 9

# தியாகராசர் கல்லூரி:மதுரை-09

(மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது.)
(தேசிய தர மறு மதிப்பீட்டில் 'அ' தகுதி பெற்றது)
139-140, காமராசர் சாலை, மதுரை - 625 009
தபால் பெட்டி எண்.107
போன். 0452/2311875

## கலையன்னையார் டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன் நினைவு விழாப் போட்டிகள் - 2016

கலையன்னையார் டாக்டர் (திருமதி) இராதா தியாகராசன் அவர்களின் நினைவு விழாவினை முன்னிட்டு மதுரைக் காமராசர் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கும், பொதுமக்களுக்குமான போட்டிகள் எம் கல்லூரியில் நடைபெற உள்ளன. மாணவர்களும், பொதுமக்களும் திரளாகக் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

**முதல் பரிசு: ரூ.5,000/- இரண்டாம் பரிசு: ரூ.3,000/-**

### போட்டி விவரங்கள்

1. மதுரை காமராசர் பல்கலைக்கழக எல்லைக்குட்பட்ட கல்லூரி மாணவர்களுக்கான போட்டிகள்

அ. பேச்சுப்போட்டி (மாணவியருக்கு மட்டும்), கால அளவு - தனித்தனியே 7 மணித்துளிகள்

தலைப்பு: "பெண்களின் முன்னேற்றத்திற்குக் காரணம் - கல்வியே / திறன்களே"

(இவற்றில் ஏதேனும் ஒரு பொருள் பற்றிப் பேச வேண்டும்)

நாள்: 15.02.2016 (திங்கள் கிழமை) நேரம்: காலை 09.30 மணி

இடம்: தியாகராசர் கல்லூரி வளாகம், மதுரை

ஆ. கட்டுரைப்போட்டி (இருபால் மாணவருக்கும்)

தலைப்பு: "மாமழை போற்றுதும்" அல்லது "தையலை உயர்வு செய்"

பக்க அளவு: 10 பக்கங்கள்

2. மதுரை மாவட்டப் பொதுமக்களுக்கான கட்டுரைப் போட்டி (வயது வரம்பில்லை)

தலைப்பு: "கண்ணகியின் அமைதியும் எழுச்சியும்" அல்லது "பெண்மையின் இலக்கணம் கண்ணகி"

பக்க அளவு: 15 பக்கங்கள்

கட்டுரை வந்து சேரவேண்டிய நாள்: 15.02.2016

ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியாக இரண்டு பரிசுகள் விழா நாளன்று வழங்கப்படும். மகளிர் தினம் மற்றும் கலையன்னையார் நினைவு தினம் (08.03.2016) அன்று விழா நடைபெறும்.

கட்டுரையினை அனுப்ப வேண்டிய முகவரி:
முதல்வர், தியாகராசர் கல்லூரி, 139-140, காமராசர் சாலை, தெப்பக்குளம், மதுரை - 625 009

நாள் : 10.01.2016

திரு. க.தியாகராசன்
செயலர்

DINAMALAR
தினமலர்

12-01-2016 பக்கம்.எண்: 1

# ருசிக்காக...

## • டீ, காபியில் உயிரை விடும் தேனீக்கள்
## • சில்வர், கண்ணாடி டம்ளர்களே தீர்வு

மதுரை, ஜன. 9 –

"டீக்கடைகளின் குப்பை கூடைகளில் கொட்டப்படும் பிளாஸ்டிக் 'கப்'களால் தேனீக்கள் அழிந்து வருகின்றன" என்கிறார், மதுரை தியாகராஜர் கல்லூரி விலங்கியல் துறை இணை பேராசிரியர் அருண் நாகேந்திரன்.

மத்திய மனிதவளத் துறை அமைச்சகம் சார்பில், இந்தியாவில் 16 நிறுவனங்களில் உயிர் மூலாதார மேலாண்மையில் கணித பயன்பாடுகளை ஒருங்கிணைப்பது குறித்த தேசிய மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மதுரை தியாகராஜர் கல்லூரியிலும் இம்மையம் அமைக்கப்பட்டு ரூ.2 கோடி வழங்கப்பட்டு உள்ளது.



பேப்பர் கப்களில் மீதமிருக்கும் டீயை உறிஞ்சும் தேனீக்கள்.

இதில் ஸ்பெக்ட்ரோ போட்டோ மீட்டர், எச்.பி.எல்.சி., மற்றும் கணித சாப்ட்வேர்கள் வாங்கப்பட்டுள்ளன. இம்மையத்தின் சார்பில் தேனீக்கள் குறித்து முதற்கட்ட ஆராய்ச்சி நடத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து அருண் நாகேந்திரன் கூறியதாவது: தேனீக்கள் இனிப்பை தேடி டீக்கடைகளை நோக்கி படையெடுக்கின்றன. சமீபத்தில் அண்ணாநகர் டீக்கடைகளை ஆய்வு செய்தோம். நாகரிகம் என்ற பெயரில் சிலர் சிறிதளவு டீயை 'கப்'பில் விட்டு செல்கின்றனர்.



இவை குப்பையில் கிடக்கும் போது உலர்ந்து ஜெல்லி போலாகிறது. இந்த இனிப்பை சுவைக்க வரும் தேனீக்கள், உட்பகுதிக்குள் செல்லும் போது இனிப்பின் பிசுபிசுப்பால் வெளியேற முடியாமல் தவிக்கின்றன.

ஒரு 'கப்'பில் அதிகபட்சமாக ஐந்து தேனீக்கள் வரை விழுகின்றன. இவற்றை மொத்தமாக கொண்டு குப்பையில் கொட்டும் போது குப்பை கையாள்பவர்கள் தேனீக்களை பறக்கவிடாமல் கொன்று விடுகின்றனர். இதுவரை 5,000 தேனீக்கள் வரை அழிந்திருக்கலாம் என கணக்கிட்டுள்ளோம்.

தேனீக்களின் மூலமே விவசாயம் செழிக்கும். மறுபடியும் சில்வர், கண்ணாடி டம்ளர்களை பயன்படுத்துவதன் மூலம் தேனீக்கள் அழிவதை தடுக்கலாம். இதுகுறித்து ஆய்வு ஒன்றையும் வெளியிட்டுள்ளோம், என்றார்.

தினமலர்
DINAMALAR

23-01-2016 பக்கம்.எண்: 8

# தெப்பத் திருவிழாவில் சிறப்பு ஏற்பாடுகள்

மதுரை, ஜன. 23–

மதுரையில் நாளை நடக்கும் மீனாட்சி அம்மன் கோயில் தெப்பத் திருவிழாவில் பங்கேற்கும் வெளிநாட்டினருக்கு சிறப்பு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

டிராவல் கிளப், தானம் அறக்கட்டளை, சுற்றுலாத்துறை சார்பில் வெளிநாட்டு பயணிகள், தியாகராஜர் கல்லூரிக்கு அழைத்து வரப்படுவர்.

இரவு 7.30 மணிக்கு கல்லூரி மாடியில் இருந்து திருவிழாவை காண வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மதுரையின் சிறப்புகள் அடங்கிய தகவல்களும் வழங்கப்படும். கிளப் தலைவர் சுந்தர், ''விழாவில் பங்கேற்க வெளிநாட்டு பயணிகள் ஆர்வமாக உள்ளனர். இதற்கான பயணிகள் முன்பதிவு நடக்கிறது,'' என்றார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

25-01-2016 பக்கம்.எண்: 3

# இன்று தி இந்து யங் வேர்ல்டு விநாடி வினா போட்டி




■ மதுரை

தி இந்து (ஆங்கிலம்) மற்றும் வி.ஐ.டி. பல்கலைக்கழகம் இணைந்து நடத்தும் யங் வேர்ல்டு குவிஸ் விநாடி வினா) போட்டி மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இன்று (ஜன. 25) நடைபெறுகிறது.

4 முதல் 6-ம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்ளும் ஜூனியர் பிரிவு போட்டி காலை 10 மணிக்கும், 7 முதல் 9-ம் வகுப்பு மாணவர்கள் கலந்துகொள்ளும் சீனியர் பிரிவு போட்டி பகல் 2 மணிக்கும் நடைபெற உள்ளன.

ஒரு அணியில் 2 பேர் கலந்துகொள்ளலாம். நுழைவுக் கட்டணம் ரூ.200 செலுத்த வேண்டும். இந்த நிகழ்ச்சியில் மதுரை மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் ஜோ.ஆஞ்சலோ இருதயசாமி கலந்துகொள்ள உள்ளார்.

THE HINDU

25-01-2016 Pg No: 2

# The Hindu Young World Quiz today

SPECIAL CORRESPONDENT

**MADURAI:** If you think you can take on the best of the brains, its time for you to take up one of the hardest tests.

Yes, the 16th edition of *The Hindu* Young World Quiz 2016 is back on Monday.

With 215 teams already registered themselves online for the prestigious event, nothing can stop you from taking part.

For, the organisers have allowed on the spot registration for the quiz, held in association with VIT University, at the venue.

**On-the-spot registration**

Interested students can turn up at Thiyagarajar College at Teppakulam here for the on-the-spot registration.

The quiz, which will be a team event with two members per team, is open for school students studying from Classes 4 to 9.

The competition for juniors category (Class 4 to Class 6) will be held at 10 a.m. while for the seniors (Class 7 to Class 9), it will be at 2 p.m. The registration fee will be Rs.200 per team.

Students taking part in the quiz will have to appear for written preliminary test based on which the top six teams will be selected for the on-stage final.

Exciting prizes are up for grabs in the quiz competition, organised in collaboration with Firefox, Kokuyo Camlin, Ars-HTA and Me Too Snacks, Tirunelveli.

Chief Education Officer, Madurai, J. Angello Irudayasamy, who is the chief guest, would distribute the prizes to the winners.

For further details, contact S.R. Prasath over 9585506050 or 04522528497.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**26-01-2016** பக்கம்.எண்: 4

# ‘தி இந்து’ யங் வேர்ல்டு விநாடி வினா போட்டி

## வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசு



▲ ‘தி இந்து’ நடத்திய யங் வேர்ல்டு விநாடி வினா போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினார் மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர் பி. சீனிவாசமூர்த்தி. படம்: ஆர். அசோக்.

■ மதுரை

‘தி இந்து’ நடத்திய யங் வேர்ல்டு விநாடி வினா போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

‘தி இந்து’ (ஆங்கிலம்) மற்றும் வி.ஐ.டி இணைந்து நடத்திய யங் வேர்ல்டு க்விஸ் (விநாடி வினா) போட்டி மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

ஜூனியர் பிரிவில் அரியலூர் ஆதித்யா பிர்லா பப்ளிக் பள்ளி முதலிடத்தையும், மதுரை மகாத்மா மாண்டிசோரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இரண்டாமிடத்தையும், திருநெல்வேலி புஷ்பலதா வித்யாமந்திர் பள்ளி மூன்று மற்றும் நான்காமிடத்தையும், மதுரை வீரபாஞ்சான் லட்சுமி பள்ளி ஐந்தாமிடத்தையும், மதுரை விரகனூர் வேலம்மாள் வித்யாலயா பள்ளி ஆறாமிடத்தையும் பெற்றன.

சீனியர் பிரிவில் திருநெல்வேலி கோல்டன் ஜூப்ளி பள்ளி முதலிடத்தையும், மதுரை மகாத்மா சி.பி.எஸ்.இ. பள்ளி இரண்டாமிடத்தையும், எஸ்.பி.ஓ.ஏ. மெட்ரிக் பள்ளி மூன்றாமிடத்தையும், ஜீவனா மெட்ரிக் பள்ளி நான்காமிடத்தையும், மகாத்மா சி.பி.எஸ்.இ. பள்ளி ஐந்தாம் இடத்தையும், டி.வி.எஸ். மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி ஆறாம் இடத்தையும் பெற்றது.

வெற்றிபெற்ற அணிகளுக்கு மாவட்ட மெட்ரிக்குலேஷன் பள்ளிகளின் ஆய்வாளர் பி. சீனிவாசமூர்த்தி பரிசுகளை வழங்கி பாராட்டினார்.

தினமணி
www.dinamani.com

30-01-2016 பக்கம்.எண்: 3

# உலகிற்கு நீதிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது தமிழ் இலக்கியங்கள்




கருத்தரங்கில், தமிழ் இலக்கியத்தில் நீதி என்ற நூலை வெளியிடும் (இடமிருந்து) உலகத் தமிழ்ச் சங்க தனி அலுவலர் க.பசும்பொன், ஆட்சியர் கொ.வீரராகவராவ், நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன், கூடுதல் ஆட்சியர் ரோகிணி ராம்தாஸ், கல்லூரிச் செயலர் க.தியாகராஜன், முதல்வர் மு.எமினி.

மதுரை, ஜன. 29: உலகிற்கு நீதிக் கொள்கையை அறிமுகப்படுத்தியது தமிழ் இலக்கியங்கள் தான் என்று நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் கூறினார்.

உலகத் தமிழ்ச் சங்கமும், மதுரை தியாகராஜர் கலைக் கல்லூரியின் தமிழ்த் துறையும் இணைந்து வியாழக்கிழமை நடத்தியக் கருத்தரங்கில் தமிழ் இலக்கியத்தில் நீதி எனும் தலைப்பில் நீதிபதி வெ. ராமசுப்பிரமணியன் பேசியது:

சிலப்பதிகாரத்தில் உள்ள 5 மன்றங்களில் பாவை மன்றமும் ஒன்று. அதில் குறிப்பிடப்பட்டுள்ள நீதி தேவதையின் சிலையானது, சரியான நீதி வழங்கப்படாத போது கண்ணீர் வடிக்கும். இதை முன்னிறுத்தியே நீதிமன்றத்தில் உள்ள நீதி தேவதையின் சிலை வடிவமைக்கப்பட்டது. ஆனால், நம்மில் பலர் நீதிமன்றங்களில் உள்ள நீதி தேவதையின் சிலை 14 ஆம் நூற்றாண்டின் ரோம சாம்ராஜ்ஜியத்தில் உருவாக்கப்பட்ட சிலையின் அடிப்படையைக் கொண்டது என நம்புகிறோம். இது தவறான வரலாற்றுப் பதிவு.

உலகிற்கு நீதி எனும் கொள்கையை அறிமுகப்படுத்தியதில் தமிழ் இலக்கியங்களுக்கு பெரும் பங்கு உண்டு. பதினெண்கீழ் கணக்கில் உள்ள 11 நூல்களும் நீதியையும், அவை அடக்கத்தையும் வலியுறுத்துபவை. நீதிபதிகளை நீதியரசர் என்று அழைக்கும் வழக்கம் உள்ளது. இது ஆங்கிலேயர் ஆட்சி காலத்து வழக்கம் என்று கூறப்படுகிறது. ஆனால், இலக்கியத்தை கற்றறிந்து தெளிவு பெற்றவர்களுக்கு இந்த வழக்கம் திருக்குறளில் இருந்து வந்தது என்கிற உண்மை புரியும். பண்டைய மன்னர்கள் நீதி, அரசியல், பொருளாதாரம் என அனைத்துத் துறைகளையும் சேர்த்து ஆட்சி செய்தனர். ஆனால், நீதியை நிலைநாட்டும் மன்னனை மட்டுமே திருக்குறளில் கடவுளுக்கு ஒப்பாகக் குறிப்பிட்டுள்ளார் திருவள்ளுவர்.

இலக்கியங்களில் நீதிக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டதற்கு முக்கிய ஆதாரம் மனுநீதிச் சோழனின் கதை. நீதியை நிலைநாட்டுவதற்காக ஐந்தறிவு ஜீவனின் கோரிக்கையை ஏற்று தன் மகனையே பலியாக அளித்தவன் மனுநீதிச் சோழன். இதே போன்று கண்ணகியின் கதையிலும் நீதியை நிலைநாட்ட மன்னர் மேற்கொண்ட முயற்சிகள் புலப்படும். முதலாம் மற்றும் இரண்டாம் உலகப் போர்கள் முடிவடைந்த பின்னர் அகதிகளுக்கான சட்டம் 1951 ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இதில் யாரெல்லாம் அகதிகள் பிரிவின் கீழ் வருவர் என்பதற்காக 8 வரைமுறை குறிக்கப்பட்டது. இதற்கு அடிப்படை 9 ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட கம்பராமாயணம் ஆகும். சர்வதேச அளவில் நீதிக்கு அடிப்படையான அனைத்தும் தமிழ் இலக்கியத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதை அறிவதில் இளைஞர்கள் ஆர்வம் காட்ட வேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவராவ், கூடுதல் ஆட்சியர் ரோகிணி ராம்தாஸ், தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர் கா.மு.சேகர், உலகத் தமிழ்ச் சங்கத் தனி அலுவலர் க.பசும்பொன், தியாகராஜர் கல்லூரிச் செயலர் க.தியாகராஜன், கல்லூரி முதல்வர் மு.எமினி, தமிழ்த் துறைத் தலைவர் நா.கருணாமூர்த்தி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் கட்டுரை வாசித்தனர்.

தினமலர்
DINAMALAR

31-01-2016

# முதலில் 'மை லார்டு' என்றவர் திருவள்ளுவர்

## நீதிபதி ராமசுப்பிரமணியன் தகவல்

மதுரை, ஜன. 31–

"நீதி வழங்குபவரை 'மை லார்டு' என்று முதலில் அழைத்தவர், திருவள்ளுவர்தான்," என்று நீதிபதி ராமசுப்பிரமணியன் கல்லூரி கருத்தரங்கில் பேசினார்.

மதுரை உலகத் தமிழ்ச் சங்கம், தியாகராஜர் கலைக்கல்லூரி இணைந்து "தமிழ் இலக்கியத்தில் நீதி" என்ற கருத்தரங்கை நடத்தியது. இவ்விழாவில் உயர்நீதி மன்ற நீதிபதி ராமசுப்பிரமணியன் பேசியதாவது:

பாவை மன்றம் பற்றி சிலப்பதிகாரம் கூறுகிறது. நீதி தவறி தீர்ப்பளிக்கும் போது, அங்கு வைக்கப்பட்டிருக்கும் பெண் சிலையிலிருந்து கண்ணீர் வடிவதாக சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ளது. எனவே, நீதிமன்றத்தில் உருவச்சிலையை ரோமானியர்களுக்கு முன்பே கொண்டு வந்தவர்கள் நாம்தான்.

திருவள்ளுவர் 'முறை செய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு இறை என்று வைக்கப் படும்' என்று கூறியுள்ளார். எனவே, நீதி வழங்குபவரை 'மை லார்டு' என்று முதலில் அழைத்தவர், திருவள்ளுவர்தான்.

விபத்து வழக்கின் போக்கினை பெரிய புராணம் கூறுகிறது. மனு நீதிச் சோழனின் மகனுடைய தேர்க் கால்களில் சிக்கி கன்று இறந்து போக, தன் மகனையும் தேர்க் கால்களில் இட்டு கொல்ல வேண்டும் என்றான் மனு நீதிச் சோழன். அதனை எதிர்த்து அமைச்சர்கள் மனு நீதிச் சோழனிடம் வாதிட்டார்கள். அது, ஒரு விபத்து வழக்கு எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கு சரியான சான்று.

இவ்வாறு பேசினார்.

தலைமை வகித்து கலெக்டர் வீரராகவ ராவ் பேசுகையில், "நீதிபதிகள் எவ்வாறு நீதி வழுவாது ஆட்சி செய்தனர் என்பதை தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன," என்றார். கல்லூரி செயலாளர் தியாகராஜன், உலகத் தமிழ்ச் சங்கம் தனி அலுவலர் பசும்பொன், பேராசிரியர்கள் எமிலி, கருணாமூர்த்தி கலந்து கொண்டனர்.

THE HINDU

02-02-2016 Pg No: 3

## Tributes paid to Tamil scholar

Tributes were paid to renowned Tamil scholar, RM. Periakaruppan, popularly known as Tamizhannal, at a meeting organised by Puratchi Kavignar Mandram here. Speakers drawn from various Tamil organisations, along with M. Tirumalai, former Vice-Chancellor, Tamil University, and former Head, Department of Comparative Literature, Madurai Kamaraj University, R. Mohan recalled the rich contribution of Tamizhannal to enrichment of Tamil language.

Tamil scholar R. Ilankumaran recalled how Tamizhannal rose to become an outstanding Tamil researcher from being a teacher at Meenakshi Sundarar High School, Karaikudi. He served in the Department of Tamil of Thiagarajar College and Madurai Kamaraj University. Over a span of 40 years, he made significant contribution to Tamil research and authored over 70 books. P. Varadarajan presided over the meeting.

தினமணி
www.dinamani.com

05-02-2016 பக்கம்.எண்: 4

# ‘கல்வியை புதிய தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் கற்க வேண்டும்’




தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் முன்னாள் முதல்வர் ஆர்.நடேசன் குறித்த புத்தகத்தை வெளியிடும் கான்பூர் ஐஐடி பிஓசி தலைவர் எம்.அனந்தகிருஷ்ணன். உடன், கல்லூரியின் தாளாளர் கருமுத்து தி.கண்ணன் உள்ளிட்டோர்.

திருப்பரங்குன்றம், பிப். 4: நவீன தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில், புதிய தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் கல்வி கற்க வேண்டும் என, கான்பூர் ஐஐடி பிஓசி தலைவர் எம். அனந்தகிருஷ்ணன் தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் தியாகராஜர் பொறியியல் கல்லூரியின் முதல் முதல்வர் ஆர். நடேசன் குறித்து, அவரது மகன் என். சேஷகிரி எழுதிய புத்தகத்தின் வெளியீட்டு விழா வியாழக்கிழமை நடைபெற்றது. கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, தாளாளர் கருமுத்து தி. கண்ணன் தலைமை வகித்தார்.

கல்லூரியின் முன்னாள் மாணவர்கள் அசோசியேஷன் தலைவர் என். ராம்குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில், கான்பூர் ஐஐடி பிஓசி.யின் தலைவர் எம். அனந்த கிருஷ்ணன் புத்தகத்தை வெளியிட்டுப் பேசியதாவது:

மாணவர்களை ஈர்க்கும் திறனோடு பாடம் நடத்துவது. தெளிவான குறிக்கோளுடன் தொடங்குவது, மேலான ஒழுக்கம், கனிவு ஆகிய நற்பண்புகளை கோத்தாரி கமிஷன் வழங்கியது. இந்த நற்பண்புகள் அனைத்தும் ஒருங்கே பெற்றவர் பேராசிரியர் ஆர். நடேசன்.

தொழில்நுட்பங்களில் ஏராளமான மாற்றங்கள் வர உள்ளன. அந்தத் தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வகையில், புதிய தகவல் தொடர்பு சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்கள் கல்வி கற்கவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில், கல்லூரியின் டீன்கள் மோகன், வாசுதேவன், பேராசிரியர் கார்த்திகேயன், உமர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். கல்லூரியின் முதல்வர் வி. அபய்குமார் நன்றி கூறினார்.

**தினமலர் DINAMALAR**

**21-02-2016** பக்கம்.எண்: 4



மகளிர் தினத்தை முன்னிட்டு மதுரை தினமலர் அலுவலகத்தில் கல்லூரி மாணவிகளுக்கு பேச்சுப் போட்டி நடந்தது. நடுவர்களாக பங்கேற்ற பேராசிரியர்கள் மலர்விழி மங்கையர்க்கரசி, இரா. மோகன், ஆசிரியை கலைகா பானு.

# தினமலர் சார்பில் கல்லூரி மாணவிகளுக்கு சைகை மொழி, குழு நடன போட்டிகள்

மதுரை, பிப். 21–

மகளிர் தினத்தை முன்னிட்டு தினமலர் சார்பில் மதுரை பாத்திமா கல்லூரியில் மார்ச் 8ல், கல்லூரி மாணவிகளுக்கான குழுநடனம் மற்றும் சைகை மொழி நாடகப் போட்டிகள் நடக்க உள்ளன.

'புதுமை பெண்ணே எழுக' என்ற தலைப்பில் நடக்கும் குழு நடனப் போட்டியில் குழுவிற்கு அதிகபட்சம் 8பேர் பங்கேற்கலாம்.

'பாலின சமத்துவம்' என்ற தலைப்பிலான சைகை மொழி நாடகத்தில் குழுவிற்கு அதிகபட்சம் 10 பேர் பங்கேற்கலாம். மார்ச் 8 காலை 9.00 முதல் 11.00 மணி

## மார்ச் 8 ல் நடக்கிறது

வரை போட்டிகள் நடக்கின்றன.

பங்கேற்க விரும்பும் குழுவினர், பிப்., 23 மாலை 5.00 மணிக்குள் ஒருங்கிணைப்பாளரிடம் 98940 09421ல் முன்பதிவு செய்யலாம். முதலில் பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில், போட்டியில் பங்கேற்க வாய்ப்பு அளிக்கப்படும்.

### பேச்சுப் போட்டி

மகளிர் தினத்தை முன்னிட்டு தினமலர் சார்பில் கட்டுரை மற்றும் கவிதைப் போட்டிகள் ஏற்கனவே நடத்தப்பட்டு விட்டன. மதுரை தினமலர் அலுவலகம் 'லோட்டஸ்' அரங்கில், கல்லூரி மாணவிகளுக்காக 'எங்கே எனது உரிமை' என்ற தலைப்பில், நேற்று நடந்த பேச்சுப் போட்டியில் நடுவர்களாக பேராசிரியர்கள் இரா. மோகன், மலர்விழி மங்கையர்க்கரசி, ஆசிரியை கலைகாபானு பங்கேற்றனர். போட்டிகளில் வெற்றி பெற்றவர்களின் விவரம் பிப்., 28 நாளிதழில் வெளியாகும்.

விழாவை பாத்திமா கல்லூரியும், ராஜ்மகால் நிறுவனமும் இணைந்து வழங்குகின்றன.

## பிப்.23ல்

நாகர்கோவில், பிப்

பிரசித்தி பெற்ற ஆற்று

பொங்கல் விழா பிப்.,23 ந

உள்ளது.

மதுரையை எரித்த கண்

கொடுங்கல்லூரார் செ

வழியில் திருவனந்தபுரம் அ

கிள்ளியாற்றின் கரையில்

னோர். அங்கு ஒரு மு

கனவில் வந்த அவர், 'எ

இங்கு ஒரு கோயில்

வேண்டும்' என கூறியதா

ஏழு மணி நேரம்
உறங்குவது
நல்லது

THE HINDU

**23-02-2016** **Pg No: 3**



## Fellowship awarded

**MADURAI:** P. Suresh, Associate Professor in Department of Zoology, Thiagarajar College, who has been working on the Indian Arthropods over the last 25 years and successfully completed many research projects funded by Government of India, was conferred fellowship of Applied Zoologists Research Association (AZRA) award – 2015 at a conference held in Cuttack recently for his outstanding research contributions in the field of Arthropods molecular phylogenetics based on DNA sequence information, a press release said here on Monday.

DINAMALAR

**28-02-2016** பக்கம்.எண்: 4

மதுரை தியாகராஜர் கல்லூரி பொருளியல் துறை சார்பில் மாண வர்களுக்கான கருத்தரங்கு நடந்தது. துறைத்தலைவர் கனகசபை வர வேற்றார். முதல்வர் எயினி தலைமை வகித்தார். மாணவர்கள் சந்திக்கும் உடல்நல பிரச்னைகள் குறித்து அரசு மருத்துவமனை டாக்டர் பிரக தீஸ்வரன் பேசினார். ஒருங்கிணைப் பாளர் அமுதா நன்றி கூறினார்.

தினமணி
www.dinamani.com
29-02-2016 பக்கம்.எண்: 2

**தியாகராஜர் கலை அறிவியல் கல்லூரி:** இங்கு, குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மரபு சார் மருத்துவப் பயன்பாடுகள் என்ற தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கம் நடைபெற்றது. விலங்கியல் துறைத் தலைவர் ஆர்.எம். முருகப்பன் வரவேற்றார். முதல்வர் மு.எயினி தலைமை வகித்தார்.

பாரதியார் பல்கலைக் கழக முன்னாள் பேராசிரியர் பி.ராமச்சந்திரன் 5 திணைகள் பற்றி விளக்கினார். விவசாயி புண்ணியக்கோடி மரபு சார் மருத்துவத்தின் மகத்துவத்தை எடுத்துரைத்தார். இதில் பல்வேறு கல்லூரிகளைச் சேர்ந்த 6 பேராசிரியர்கள் உள்பட 25 பேர் கட்டுரை வாசித்தனர். தமிழ்த்துறைத் தலைவர் என்.கருணாமூர்த்தி நன்றி கூறினார்.

THE HINDU

29-02-2016 Pg No: 2

# International seminar

A two-day international seminar on "Madurai in literature" was organised at Sri Meenakshi Government College for Women, Madurai, from February 25. It was inaugurated by M. Thirumalai, former Vice-Chancellor, Tamil University. The Principal, S. Mangayarkarasi, presided over the inaugural session. S. Chandra, Associate Professor, explained the objectives of the seminar. Scholars from all over Tamil Nadu, Puducherry, Singapore, Malaysia and Australia presented papers in 12 sessions. G. Gnanasambandan, Professor Emeritus, Thiagarajar College, delivered the valedictory address.

தினமலர்
DINAMALAR

06-03-2016 பக்கம்.எண்: 4

## கருத்தரங்கம்

மதுரை தியாகராஜர் கல்லூரியில் குறிஞ்சிப்பாட்டில் கபிலர் குறிப்பிட்ட 99 மலர்களின் மரபு சார் மருத்துவப் பயன்பாடு குறித்த கருத்தரங்கம் நடந்தது. கல்லூரி முதல்வர் எயினி தலைமை வகித்தார். விலங்கியல் துறைத் தலைவர் முருகப்பன் வரவேற்றார்.

டாக்டர் புனிதா, 36 மலர்களின் மருத்துவ குணங்கள், 27 மலர்களின் பாகங்களின் மருத்துவ பயன்களை விளக்கினார். சிறந்த கட்டுரைகள் வாசித்தவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. தமிழ்த்துறைத் தலைவர் கருணாமூர்த்தி, விலங்கியல் துறை துணைப் பேராசிரியர் ரவி, பாரதியார் பல்கலை முன்னாள் பேராசிரியர் ராமச்சந்திரன், முனைவர் திருவள்ளுவன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

THE HINDU

**07-03-2016** **Pg No: 4**

A State-level students' seminar on "Emerging issues in health sector of Indian economy" was organised by the PG and Research Department of Economics of Thiagarajar College, Madurai, on February 23. The chief guest, A. Pragatheeswaran, former Chief Civil Surgeon, Government Rajaji Hospital, in his address, spoke about the challenges and opportunities in the Indian health sector and the spread of communicable and non-communicable diseases. He focused on the main health issues related to the student community. S. Kanagasabai, Head, Department of Economics, welcomed the gathering. M. Eyini, Principal, delivered the presidential address. A total of 115 papers were presented at the seminar in which over 400 students from 10 colleges participated. A. Kumudha, organising secretary, proposed thanked.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

**10-03-2016** பக்கம்.எண்: 4

# தியாகராஜர் கல்லூரியில் இலக்கிய கருத்தரங்கு

**மதுரை**

மதுரை தியாகராஜர் கல்லூரி ஆங்கிலத் துறை சார்பில், புலம் பெயர்ந்த இலக்கியங்களில் ருத்ர வெளிப்பாடு; பின் காலனியப்பார்வை' என்ற தலைப்பில் கருத்தரங்கு நடைபெற்றது. ஆங்கிலத் துறைத் தலைவர் ஏ.சுபத்ராதேவி வரவேற்றார்.

இதில் கல்லூரி முதல்வர் எம்.எயினி பேசும்போது, 'புலம் பெயர்ந்த இலக்கியங்கள் புலம் பெயர்ந்த மக்களின் வலிகளை புலப்படுத்துவதாக அமைந்துள்ளன என்றார். சிறப்பு விருந்தினராக பங்கேற்ற பாளையங்கோட்டை புனித ஜான் கல்லூரி ஆங்கிலத் துறை முன்னாள் தலைவர் கருணாகரன் பேசுகையில், 'புலம் பெயர் இலக்கியங்களில் மக்கள் இனம், நிறம் ரீதியாகப் பிரிக்கப்படுகின்றனர் என்றார்.

இந்த கருத்தரங்கில் மாநிலம் முழுவதிலும் இருந்து திரளான கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்றனர். அவர்கள் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். பி.பிரேமலதா நன்றி கூறினார். கருத்தரங்கு ஏற்பாடுகளை ஜான்டேவிட்ராஜா மற்றும் ஆங்கிலத் துறை ஆசிரியர்கள் செய்திருந்தனர்.

தினமணி
www.dinamani.com

**11-03-2016** பக்கம்.எண்: 4

# தமிழ் பாரம்பரிய மீட்டுருவாக்கம் அவசியம்

**குடவாயில் பாலசுப்பிரமணியன்**



தியாகராசர் கல்லூரியில் வியாழக்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் பேசினார் தொல்லியல் ஆய்வறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியன். உடன் (இடமிருந்து). மருத்துவர் வ.இன்பசேகரன், கல்லூரி முதல்வர் மு.எமினி, தமிழ் துறைத் தலைவர் நா.கருணாமூர்த்தி.

மதுரை, மார்ச் 10: தமிழின் எழுத்து, கலை உள்ளிட்ட பாரம்பரியம் மீட்டுருவாக்கப்படுவது அவசியமானது என, தொல்லியல் ஆய்வறிஞர் குடவாயில் பாலசுப்பிரமணியன் வலியுறுத்தியுள்ளார்.

மதுரை தியாகராஜர் கல்லூரி தமிழ் துறை சார்பில் வியாழக்கிழமை நடைபெற்ற தண்பாண்டி நாட்டுக் கல்வெட்டுகளும் கலைச் செல்வங்களும் எனும் பொருளில் அவர் பேசியதாவது: தமிழ் எழுத்துகள் காலந்தோறும் மாறிவந்துள்ளன. தற்கால தமிழ் எழுத்துகள் சோழர் காலத்தில் தோன்றிய தமிழி எனும் வகையைச் சேர்ந்தது.

பண்டைய தமிழகத்தில் சேர, சோழ நாடுகள் இருப்பினும் பாண்டிய நாட்டையே தமிழ் நாடு எனும் பொருளில் சேக்கிழாரும், பாரதியும் குறிப்பிடுகின்றனர்.

வண்டியூர், திருவாதவூர் கண்மாய்களில் நீரை வெளியேற்றுமிடத்தில் உள்ள இரு கல்தூண் அமைப்பானது நமது முன்னோரின் அறிவியல் தொழில்நுட்பத்துக்கு சான்றாகும். நமது பாரம்பரிய முறையை அழித்துவிட்டு, ஆங்கிலேயர் மதகு அமைத்தனர். அதன்பின்னரே, நமது கண்மாய்களில் தூர்வாரும் நிலை ஏற்பட்டது.

பழந்தமிழ் பாரம்பரியத்தை மீட்டுருவாக்கம் செய்யும் அவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது. அத்தகைய பணியில் இளைஞர்கள் ஈடுபட வேண்டும் என்றார். நிகழ்ச்சியில், கல்வெட்டுகள், கண்மாய் தொழில்நுட்பம் குறித்த படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன. நிகழ்ச்சிக்கு தியாகராஜர் கல்லூரி முதல்வர் மு. எமினி தலைமை வகித்தார். மருத்துவர் வ. இன்பசேகரன் அறிமுகவுரையாற்றினார். பேராசிரியர் சுந்தரம், பாரதிக் கவிஞர் மன்றத் தலைவர் பி. வரதராஜன், சரஸ்வதி நாராயணன் கல்லூரி அலுவலர் எம். மணிமாறன், ஓய்வுபெற்ற நூலகர் ந. பாண்டுரங்கன், பேராசிரியை மலர்விழி மங்கையர்க்கரசி ஆகியோர் கலந்து கொண்டனர்.

தியாகராஜர் கல்லூரி தமிழ் துறைத் தலைவர் நா. கருணாமூர்த்தி வரவேற்றார். இணைப் பேராசிரியர் இ. பேச்சிமுத்து நன்றி கூறினார்.

THE HINDU
14-03-2016 Page No : 4

## // Seminar

Department of Chemistry of Thiagarajar College, Madurai, conducted a State-level inter-collegiate seminar on February 24. V. Rajendiran of the Central University of Tamil Nadu, in his keynote address, focused on the investigation carried out on a variety of metal complexes towards curing different kinds of cancer. A. Suganthi, Head, Department of Chemistry, welcomed the gathering. Principal M. Eyini delivered the presidential address. Students presented papers on plastic waste management and smart polymers. T. Arumuganathan, organising secretary, proposed a vote of thanks.

தினமலர்
DINAMALAR
16-03-2016 பக்கம் எண்: 2

# உடல் மொழிகளின் மூலம் ஆளுமையை வளர்க்கலாம்

## கருத்தரங்கில் தகவல்

மதுரை, மார்ச் 16 –

''வார்த்தையின்றி உடல் மொழிகளின் மூலம் தொடர்புகளை கையாளலாம்,'' என, மதுரை தியாகராஜர் கல்லூரி பெண் கல்வி மையம் நடத்திய கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

உதவி பேராசிரியை சுபத்ரா தேவி வரவேற்றார். முதல்வர் எயினி தலைமை வகித்தார். அமெரிக்கன் கல்லூரி உதவி பேராசிரியர் லாரன்ஸ் பேசியதாவது: 50ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆண்களும், பெண்களும் சமஅளவில் தலைமுடி வளர்த்திருந்தனர்.

ஆண்கள் வேட்டையாடவும், குடும்பமாகவும் பழகிய பின் மல்யுத்தத்தில் ஈடுபட்டனர். அப்போது தான் நீளமான தலைமுடியை பலவீனமாக நினைக்க ஆரம்பித்தனர். அதன்பின் ஆண்களுக்கு தலைமுடி குறைவாகவும், பெண்களுக்கு நீளமாகவும் என வேறுபாடு உண்டானது.

நீளமான தலைமுடி பெண்களை பலவீனமாக காண்பிக்கும். தோள்பட்டை வரையுள்ள தலைமுடி தன்னம்பிக்கை, தைரியசாலிகளாக ஆளுமைத்திறனை வெளிப்படுத்தும்.

முகத்தில் எந்த மாற்றமும் இன்றி எதிரில் உள்ளவர்களிடம் பேசும் போது ஈர்ப்புத்தன்மை ஏற்படாது.

சற்றே புருவங்களை உயர்த்தி பேசும் போது மற்றவர்களின் கவனத்தை ஈர்த்து நேர்மறை சிந்தனைகளை வளர்க்க முடியும். ஒருவரை பார்த்து பேசும் போது அதிகபட்சம் ஆறு வினாடிகளாவது நேர் பார்வையாக பார்க்க வேண்டும், என்றார். உதவி பேராசிரியர் அன்புகீதா நன்றி கூறினார்.

தினமலர்
DINAMALAR

**17-03-2016** பக்கம் எண்: 4

## விளையாட்டு விழா

மதுரை தியாகராஜர் கல்லூரியில் விளையாட்டு விழா நடந்தது. உடற்கல்வி இயக்குனர் செல்வக் குமார் ஆண்டறிக்கை வாசித்தார். முதல்வர் எய்னி, மதுரை காமராஜ் பல்கலை உற்கல்வி இயக்குனர் ஜெயவீரபாண்டியன், முன்னாள் மாணவி சீதாலட்சுமி மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர். பேராசிரியர் செந்தில் நன்றி கூறினார்.

தினமணி
www.dinamani.com

**20-03-2016** பக்கம் எண்: 2

## தியாகராஜர் கல்லூரி விளையாட்டு விழா

மதுரை, மார்ச் 19: மதுரை தியாகராஜர் கல்லூரியின் 67 ஆவது கல்லூரி நாள் மற்றும் விளையாட்டு விழா நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் மு.எயினி தலைமை வகித்தார். மதுரை காமராஜர் பல்கலைக்கழக உடற்கல்வி இயக்குநர் ஜெயவீரபாண்டியன், சதுரங்க விளையாட்டு வீராங்கனை சீதாலட்சுமி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சிலம்பம், யோகா, எரோபிக் ஆகிய நிகழ்வுகளை மாணவர்கள் நிகழ்த்திக் காட்டினர். தேசிய மாணவர் படை, இளைஞர் செஞ்சிலுவைச் சங்கம் ஆகிய பிரிவினரின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. கல்லூரி உடற்கல்வி இயக்குநர் செல்வகுமார் வரவேற்றார். ஆங்கிலத்துறை பேராசிரியர் சு.செந்தில் நன்றி கூறினார்.

தினமலர்
DINAMALAR

**21-03-2016** பக்கம் எண்: 2

# பள்ளி, கல்லூரி செய்திகள்

## வாசகர் மன்ற விழா

மதுரை தியாகராஜர் கல்லூரியில் வாசகர் மன்றம் அறிமுக விழா நடந்தது. முதல்வர் எயினி தலைமை வகித்தார். நூலகர் கார்த்திராஜன் ஒருங்கிணைத்தார். அருணன் எழுதிய 'யுகங்களின் தத்துவம்' நூலை விரிவுரையாளர் தமிழரசன் அறிமுகப்படுத்தினார்.

நம்மாழ்வார், கிருஷ்ணமூர்த்தியின் நூல்களை மாணவர்கள் ஜெயவள்ளி, கலைச்செல்வி அறிமுகம் செய்தனர். தமிழ்த்துறை தலைவர் கருணாமூர்த்தி, இணைப் பேராசிரியர் காந்திதுரை பங்கேற்றனர்.

THE HINDU
21-03-2016 Page No : 2

## Diasporic literature

The Department of English of Thiagarajar College conducted a State-level seminar on "Diasporic dilemma in diatribe narration: postcolonial perspectives" on March 4. T. Karunakaran, former Head, Department of English, St. John's College, Palayamkottai, in his inaugural address, explained how diasporic literature encompassed themes such as discrimination, loss of self-respect and racial discrimination.

It was otherwise known as exile literature. V. Subathra Devi welcomed the gathering. M. Eyini, Principal, delivered the presidential address. More than 35 papers were presented at the seminar by students. P. Premalatha proposed a vote of thanks.

தினமணி
www.dinamani.com

22-03-2016 பக்கம் எண்: 2

### உலகக் கோப்பை துப்பாக்கிச் சுடும் போட்டி

# மதுரையைச் சேர்ந்த கல்லூரி மாணவர்கள் 2 பேர் தேர்வு

மதுரை, மார்ச் 21: உலகத் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்கும் இந்திய அணிக்கு மதுரையில் உள்ள கல்லூரி மாணவர்கள் இருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.



ஜெர்மனியில் உள்ள சூல் நகரில் ஏப். 29 ஆம் தேதி முதல் உலகக் கோப்பைக்கான துப்பாக்கி சுடும் போட்டிகள் பல பிரிவுகளில் நடைபெறுகின்றன. இதில் இந்தியா சார்பில் பங்கேற்கும் வீரர்களுக்கான தேர்வு பிப்ரவரியில் கேரள மாநிலம் திருவனந்தபுரத்தில் நடைபெற்றது. துப்பாக்கி சுடுதலில் ரைபிள் மற்றும் மூன்று நிலை உள்ளிட்ட பிரிவுகளுக்கு வீரர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

அதில் ரைபிள் பிரிவுக்கான 20 வயதுக்குள்பட்டோர் அணியில் மதுரை திருப்பரங்குன்றத்தில் உள்ள தியாகராஜர் பொறியியல் கல்லூரி மாணவர் ப.அஜய்நித்திஸ் (படம்) தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இவர் அக்கல்லூரியில் பி.இ. முதலாண்டு படித்து வருகிறார். கடந்த 2011 முதலே மாநில, தேசிய அளவிலான துப்பாக்கி சுடுதல் போட்டியில் பங்கேற்று மாநில அளவில் 50 பதக்கங்களையும், தேசிய அளவில் 20 பதக்கங்களையும் இவர் பெற்றுள்ளார்.

உலகக் கோப்பை போட்டிக்கு மூன்றாம் நிலை போட்டியில் 20 வயதுக்குள்பட்டோர் பிரிவுக்கான இந்திய அணியில் மதுரை தியாகராஜர் கல்லூரி மாணவர் சர்வேஷ் சொரூப் சங்கரும் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக ரைபிள் கிளப் வட்டாரங்கள் தெரிவித்தன.

தேசிய அணிக்குத் தேர்வாகியுள்ள மாணவர்களை மதுரை ரைபிள் கிளப் தலைவரான மாநகர் காவல் ஆணையர் சைலேஷ்குமார் யாதவ் பாராட்டினார்.

தினமணி
www.dinamani.com
24-03-2016 பக்கம் எண்: 2

மதுரை, மார்ச் 23: தியாகராஜர் கலை அறிவியல் கல்லூரி: இக்கல்லூரியின் வாசகர் மன்ற அறிமுக நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் மு.எயினி தலைமை வகித்தார். கல்லூரியின் நூலகர் கார்த்தி ராஜன் ஒருங்கிணைத்தார். எழுத்தாளர் அருணனின் யுகங்களின் தத்துவம் என்ற நூலை தமிழ்த்துறை விரிவுரையாளர் ச.தமிழரசனும், விவசாயி கோ.நம்மாழ்வாரின் உழவுக்கும் உண்டு வரலாறு என்ற நூலை சௌ.ஜெயவள்ளியும் ஆய்வுரை செய்தனர். தமிழ்த்துறைத் தலைவர் ந.கருணாமூர்த்தி, இணைப் பேராசிரியர் சு.காந்திதுரை ஆகியோர் ஆகியோர் நன்றி கூறினர்.

தினமலர்
DINAMALAR
25-03-2016 பக்கம் எண்: 3

# ‘இசை கலை மட்டுமல்ல; பாடம்’

**மதுரை, மார்ச் 25–**

மதுரை தியாகராஜர் கல்லூரியில் மாணவர்களுக்கு மேற்கத்திய இசை குறித்து, பியானோ கலைஞர் அனில் சீனிவாசன் பயிற்சி அளித்தார்.

அவர் பேசியது:

பாடல்களை ரசிப்பது மன அமைதிக்காக என நாம் கூறுகிறோம். ஆனால், இன்றைய பாடல்களால் எந்த பயனும் இல்லை. பழைய பாடல்கள் கேட்பதற்கு இத்மாக இருந்தன. தமிழ் கலாசாரத்தைப் பொறுத்தவரை, நாம் ஒவ்வொரு நிகழ்விற்கும் ஒரு பாடல் வைத்துள்ளோம்.

இசை வெறும் கலை மட்டுமல்ல. மாறாக அது இயற்பியல், கணிதம் போல ஒரு பாடம் என்றார்.

இசையை எவ்வாறு வெவ்வெறு கோணங்களில் உருவாக்குவது, அவற்றை இணைப்பது உள்ளிட்ட பயிற்சிகளை அவர் அளித்தார்.



மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடந்த இசை சொற்பொழிவு நிகழ்ச்சியில் பியானோ வாசித்த அனில் சீனிவாசன்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
25-03-2016 பக்கம் எண்: 4



▲ இசை தொடர்பான சிறப்புக் கருத்தரங்கில் பேசுகிறார் பியானோ கலைஞர் அனில் ஸ்ரீனிவாசன்.
படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி.

# இசை பொழுதுபோக்கு அறிவு சார்ந்தது

## பியானோ இசைக் கலைஞர் தகவல்

■ மதுரை

இசை பொழுதுபோக்கானது மனநிம்மதிக்காக கேட்பதல்ல. அது அறிவு சார்ந்தது என பியானோ இசைக் கலைஞர் அனில் ஸ்ரீனிவாசன் பேசினார்.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் இசை தொடர்பான சிறப்புக் கருத்தரங்கம் நேற்று நடைபெற்றது. கல்லூரி செயலர் கே.ஹரி தியாகராஜன் தலைமை வகித்தார். கல்லூரி முதல்வர் மு.எயினி, தமிழிசை ஆய்வாளர் மம்மது மற்றும் இசை ஆர்வலர்கள், மாணவர்கள் பலர் பங்கேற்றனர்.

இசையின் கரு மற்றும் எதிர்காலம் குறித்து பியானோ இசைக் கலைஞர் அனில் ஸ்ரீனிவாசன் பேசியதாவது: இசை குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மாநகராட்சி பள்ளி மாணவர்கள் 60 ஆயிரம் பேருக்கு வகுப்புகள் எடுத்துள்ளேன். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இதை செய்வேன். டுவிங்கிள், டுவிங்கிள் லிட்டில் ஸ்டார் என்ற பாடலுக்கு 275 ஆண்டுகளுக்கு முன்பே மொசார்ட் என்பவர் தனது 12 வயதில் இசையமைத்தார். இன்றும் இந்த இசை உலக மக்களிடம் நிலைத்து நிற்கிறது. இந்த இசையை எந்த பாடலுக்கும் பொருத்திப் பார்க்கலாம்.

> இசை குறித்து அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக மாநகராட்சி பள்ளி மாணவர்கள் 60 ஆயிரம் பேருக்கு வகுப்புகள் எடுத்துள்ளேன். வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் இதை செய்வேன். உண்மையில் இசையானது அறிவுசார்ந்தது. மரபில் உருவானது.

கலையாகவும், பொழுதுபோக்குக்கும், மனநிம்மதிக்காக மட்டுமே இசையை பயன்படுத்துவதாகக் கூறுகிறோம். உண்மையில் இசையானது அறிவுசார்ந்தது. மரபில் உருவானது. அறிவியல் மாணவர்கள் இசையை அவசியம் கற்க வேண்டும். மெல்போர்ன் பல்கலைக்கழகத்தில் அறிவியல் மாணவர்களுக்கு இசை ஒரு பாடமாகவே உள்ளது. கட்டிடக் கலைக்கும் இசைக்கும் தொடர்புள்ளது. இசை மாறிக்கொண்டே இருக்கும். கம்ப்யூட்டர், லேப்டாப், ஐ போன் என காலத்துக்கேற்ப மாறி வருவதுபோல் இசையிலும் வந்துகொண்டே இருக்கிறது. ஏற்கெனவே உள்ள இசையுடன் வேறு ஒரு ராகம், சுரத்தை சேர்த்தல், கலத்தல், புதிதாக மாற்றுதல் என்ற அடிப்படையில் இசை பல்வேறு வடிவங்களாக மாறிவருகிறது. உலகில் 95 சதவீத நாடுகளில் பியானோ இசை பயன்படுத்தப்படுகிறது. மேற்கத்திய இசை தேவாலயத்தில் வழிபாட்டிலும், இந்திய இசை முதலில் கோயிலிலும் தொடங்கியுள்ளது என்றார்.

தினமணி
www.dinamani.com

29-03-2016 பக்கம் எண்: 2

# ஈடுபாட்டுடன் கூடிய முயற்சியே வெற்றி தரும்

## விண்வெளி விஞ்ஞானி நெல்லை சு.முத்து

மதுரை, மார்ச் 28: எந்தத் துறை சார்ந்தவராக இருந்தாலும், ஈடுபாட்டுடன் கூடிய முயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம் என விண்வெளி விஞ்ஞானி நெல்லை சு.முத்து கூறினார்.

மதுரையில், திங்கள்கிழமை நடைபெற்ற தியாகராஜர் கல்லூரியின் 67ஆம் ஆண்டு விழாவில் பங்கேற்று அவர் பேசியதாவது: எத்துறை சார்ந்தவராக இருந்தாலும், அதில் ஈடுபாடும், அதுதொடர்பான அறிவாற்றலும், அதில் தெளிவான முடிவெடுத்தலும், பலனை எதிர்பாராது உழைத்தலுமே நிச்சயமான வெற்றியை தரும். சமீப காலமாக வளர்ந்து வரும் தகவல் மற்றும் உயிரி தொழில் நுட்பம் சார்ந்த நானோ தொழில் நுட்பம் எதிர்காலத்தில் பெரும் அறிவியல் புரட்சியை ஏற்படுத்துவதாக வளர்ந்து வருகிறது. அதுபோன்ற துறைகளில் ஈடுபாட்டுடன் கூடிய முயற்சியால் வெற்றியை நிச்சயம் அடையலாம் என்றார்.



விழாவில், மாணவிக்கு பரிசு வழங்குகிறார் விண்வெளி விஞ்ஞானி நெல்லை சு.முத்து. உடன் கல்லூரிச் செயலர் க.தியாகராசன், கல்லூரி முதல்வர் மு.எயினி.

நிகழ்ச்சிக்கு கல்லூரித் தாளாளர் கருமுத்து தி.கண்ணன் தலைமை வகித்தார். பேராசிரியர்கள் நா. கருணாமூர்த்தி, எம்.கணேசன் ஆகியோர் பாராட்டப்பட்டனர். போட்டிகளில் வெற்றி பெற்ற மற்றும் கல்வியில் சிறந்து விளங்கிய மாணவ,மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி முதல்வர் மு.எயினி ஆண்டறிக்கை வாசித்தார். கல்லூரித் துணைத் தலைவர் உமாகண்ணன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். கல்லூரிச் செயலர் க.தியாகராஜன் வரவேற்றார். மாணவர் நலன் முதன்மையர் பேராசிரியர் ஆர். சீனிவாசன் நன்றி கூறினார்.

THE NEW INDIAN EXPRESS

30-03-2016 Page No : 2

# Collector Creates Voting Awareness

Express News Service

**Madurai:** Collector-cum-District Election Officer K Veera Raghava Rao created awareness among people to achieve 100 per cent polling in the ensuing assembly election.

According to an official statement several awareness programmes such as cycle rally, signature campaign, human chain, sand art exhibition have been conducted by the Collector in the district to spread the word on voting. As a part of the awareness campaign, the collector distributed prizes to the students who won the competitions that were organised at Thiagarajar College to create awareness among the students about importance of voting on Tuesday.

Similarly, the Collector also distributed notices to the passengers at the Matuthavani bus stand on Tuesday to create awareness among people to achieve 100 per cent polling in the district during the assembly elections. Later, he also flagged off an awareness rally from the Mattuthavani bus stand, stated a release.

## ₹69.7K Seized from Timber Merchant

Members of a static surveillance team seized ₹69,700 unaccounted cash from a timber merchant at Bodi on Monday.

According to sources, a static surveillance team led by Tahsildar Alagumani was conducting a vehicle check on Salai Kaliamman Temple Road in Bodi when the team intercepted the car of Prasad from Adimali in Kerala and found ₹69,700.

தினமணி
www.dinamani.com
30-03-2016 பக்கம் எண்: 3

# 100சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தி...




மதுரையில் மாவட்ட நிர்வாகம் மற்றும் தியாகராஜர் கல்லூரி சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு பிரசாரத்தில் கலந்துகொண்ட மாணவர்கள்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
30-03-2016 பக்கம் எண்: 3

# தாய்மொழியில் கற்கும் கல்வி மனதில் பதியும்

## விஞ்ஞானி சு. முத்து தகவல்

மதுரை

அவரவர் தாய்மொழியில் கற்கும் கல்வி மனதில் ஆழமாகப் பதியும் என விஞ்ஞானி நெல்லை சு.முத்து தெரிவித்தார்.

மதுரை தியாகராஜர் கல்லூரியின் 67-வது ஆண்டு விழா நடைபெற்றது. கல்லூரிச் செயலர் க.தியா கராஜன் வரவேற்றார். கல் லூரி முதல்வர் மு.எயினி ஆண்டறிக்கை வாசித்தார். பணி ஓய்வு பெறவிருக்கும் பேரா சிரியரியர்கள் நா.கருணாமூர்த்தி, கு.கணேசன் ஆகியோர் கவுரவிக்கப்பட்டனர்.

கல்லூரி படிப்பை நிறைவு செய்யும் மாணவர்கள் சார்பில் ஜே.செல்வமுத்துக்குமார், இ.வி.எம்.ஆனந்த் ஆகியோர் பேசினர்.

விழாவில் இஸ்ரோ விஞ்ஞானி நெல்லை சு.முத்து சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு பேசியதாவது:

மனிதர்களின் தொழில்நுட்பம் மற்றும் அகநுட்பத்தை வளர்த்தெடுப்பது அறிவியல். அறிவியலை ஒரே கோணத்தில் பார்க்காமல் வேறுபட்ட கோணங்களில் பார்க்க வேண்டும்.

எந்த துறையாக இருந்தாலும், அத்துறையின் மீது அன்பும், அக்கறையும் இருக்க வேண்டும். அத்துறை குறித்து ஆழ்ந்த அறிவும் மற்றும் தெளிவும் அவசியம். அவரவர் தாய்மொழியில் கல்வி கற்கும்போது அந்தக் கல்வி மனதில் ஆழமாகப் பதியும். சமூகம் தன்னிறைவு பெறுவதற்கு உணவும், அது சார்ந்த வேளாண்மையும், பாதுகாப்பும் மிக முக்கியம் என்றார்.

விழாவில் பேராசிரியர் சீ.கனகசபை, பேராசிரியர் ஸ்ரீனிவாசன் ஆகியோர் பேசினர்.

தினமலர்
DINAMALAR
30-03-2016 பக்கம் எண்: 3

# பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்திய கலெக்டர்

**மதுரை, மார்ச் 30–**

மதுரை மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில் நுாறு சதவீத ஓட்டளிப்பை வலியுறுத்தி சட்டக் கல்லுாரி என்.எஸ்.எஸ்., மாண வர்களின் ஊர்வலத்தை துவக்கிய கலெக்டர் கே.வீரராகவ ராவ், பயணிகளிடம் விழிப்புணர்வு ஏற்ப டுத்தினார்.

மதுரை தெற்கு தொகுதி தியாக ராஜர் கல்லுாரியில் ஓட்டளிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி மாணவ, மாணவியருக்கு போட்டிகள் நடத் தப்பட்டன. ஓட்டுப்பதிவு நாள் மே 16ஐ குறிக்கும் வடிவில் மாணவ, மாணவியர் அமர்ந்தனர். போட் டிகளில் வெற்றி பெற்றோருக்கு கலெக்டர் பரிசுகளை வழங்கினார்.

பின் மாட்டுத்தாவணி பஸ் ஸ்டாண்டில் சட்டக் கல்லுாரி மாணவர்கள் நுாறு சதவீத ஓட் டுப்பதிவை குறிக்கும் வகையில் அமர்ந்திருந்தனர். பயணிகளிடம் கலெக்டர் துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத் தினார்.

கூடுதல் கலெக்டர் ரோகிணி, பயிற்சி கலெக்டர் கில்லி சந்தி ரசேகர், தேர்தல் அலுவலர்கள் செல்லப்பா (தெற்கு), வில்லிபாய் (வடக்கு), தாசில்தார் இளமுருகன், உதவி தேர்தல் அலுவலர்கள் ரத்தி னவேலு, சூர்யகுமார், தியாகராஜர் கல்லுாரி முதல்வர் எயினி, சட்டக் கல்லுாரி முதல்வர் மனோகரன் மற்றும் பலர் பங்கேற்றனர்.

தினமலர்
DINAMALAR
03-04-2016 பக்கம் எண்: 12

# இருந்தால் இலை; முதிர்ந்தால் சருகு; உலர்ந்தால் உரம்!

இலைகள்... இப்பூமிப் பந்தின் மீது படியும் வெப்பத்தை தாங்கிப் பிடிக்கும் பசுமை குடைகள். மரத்தில் இருந்தால் மனிதர், விலங்குகளுக்கு நிழலாக விரிகிறது. உதிர்ந்தால் சருகாகி நிலப் போர்வையாய் மாறி வெப்பத்தை பூமிக்குள் ஊடுருவாமல் தடுக்கிறது. அதையே நீர் தெளித்து சாணம் கரைத்து மட்கச் செய்தால் நல்லதொரு உரமாகி மண்ணை வளமாக்குகிறது. யானை மட்டுமின்றி... மரத்தின் இலைகளும் இருந்தாலும் ஆயிரம் பொன்; இறந்தாலும் ஆயிரம் பொன் தான்.

இதை உணர்ந்தால் உதிர்ந்து விழும் சருகுகளை பூமிக்கு பாரமாக, குப்பையாக நினைக்கத் தோன்றாது என்கிறார், மதுரை தியாகராஜர் கல்லூரி தாவரவியல் துறை உதவி பேராசிரியர் கண்ணன்.

அதை நிரூபிக்கும் வகையில் கல்லூரியில் உள்ள மரங்களின் இலைகளை சேகரித்து உரமாக மாற்றி வருகிறார்.

அவர் கூறியதாவது: சருகுகளை மொத்தமாக சேகரித்து வைக்கிறோம். ஓரடி உயரத்திற்கு சருகுகளை நிரப்பி படுக்கை தயாரித்து அதன் மேல் சாணக்கரைசல் தெளிக்க வேண்டும். இதேபோல ஐந்தடி உயரம் வரை சருகு நிரப்பி நடுநடுவே சாணக்கரைசல் தெளிக்க வேண்டும். ஒருநாள் விட்டு ஒருநாள் தண்ணீர் தெளித்தால் சாணத்தில் உள்ள உயிர்சத்து, பாக்டீரியாக்கள் சருகுகளை மட்கவைத்து விடும். 45 – 60 நாட்களில் சருகுகளில் உள்ள வெப்பம் வெளியேறி கருப்பு நிறமாகும். இது தான் தொழுஉரம்.

**இரட்டை வருமானம்**

நேரடியாக இலைச் சருகுகளின் அடியில் மண்புழுக்களை விட்டால் அவை வெப்பம் தாங்காமல் இறந்து விடும். அவை வளர்வதற்கு நல்ல காற்றோட்டம், வேலை சரப்பதம் தேவை. எனவே சருகுகளை தொழு உரமாக மாற்றி அதை எடுத்து தொட்டியில் நிரப்பி மண்புழு விடுகிறோம். இதில் ஒரு கிலோ மண்புழு விட்டால் பத்தே நாட்களில் நான்கு மடங்கு புழுக்கள் பெருகிவிடும். ஒரு கிலோ மண்புழு விலை ரூ.300. மண்புழு உரமும் கிடைப்பதால் இரட்டை வருமானம் கிடைக்கும். மண்புழு அதன் எடைக்கு சமமான அளவு தினமும் சாப்பிடும்.







மதுரை தியாகராஜர் கல்லூரியில் உயிர் உரமாக்கப்படும் இலைகள். அடுத்த படம்: கழிவுநீர் சுத்திகரிப்பு தொட்டிகள். கடைசி படம்: உள்நாட்டுரக செண்பகமரம் நடப்பட்டுள்ளது.



கழிவுநீரை சுத்திகரிக்கும் நுண்ணுயிரி உருண்டை.

அதன் வேலை சாப்பிட்டு இனப்பெருக்கம் செய்வது தான். மண்புழு வாய்க்குள் இருக்கும் பாக்டீரியாக்கள் உணவை நொறுக்க செய்து கழிவாக வெளி வருகிறது. இந்த வேலையை மனிதனால் செய்ய முடியாது. மண்ணில் இருக்கும் சத்தை சாப்பிடுவது ஒரு வகை நீளமான புழு. அவை இலை, தழைகளை சாப்பிடாது. மண்புழு உரம் தயாரிப்பிற்கு ஆப்பிரிக்கன் சிவப்பு மண்புழுக்கள் பயன்படும். இவை இலை, தழைகளை மட்டுமே சாப்பிடும்.



கண்ணன்

**மண்ணை மிதிக்கணும்**

மாணவர்களுக்கு இயற்கைக் கல்வியை கற்றுத் தரும் வகையில் உரம் தயாரிப்பது, மரம் நடுவது போன்ற பணிகளை செய்கிறோம். மரம் நடுவது என்பது சாதாரண விஷயமல்ல. மூன்றடி ஆழ, அகலத்தில் பள்ளம் தோண்ட வேண்டும். அதில் மரக்கன்றை நட்டு குழியில் தோண்டிய மண்ணை மீண்டும் நிரப்பி கால்களால் நன்றாக மிதித்து விட வேண்டும்.

அப்படி செய்யாவிட்டால் மண் அடியில் காற்று நிரம்பி வேர்கள் காய்ந்து விடும். உள்நாட்டு ரக மரங்களுக்கு தான் முக்கியத்துவம் தருகிறோம்.

மேற்கு தொடர்ச்சி மலையில் நோககத்தி, மருதம், ஆல், வேம்பு, புங்கன், கடம்பம், குமிழ், இலுப்பை, செண்பகம், இலுப்பை, புளிய மரங்கள் இயற்கையான சூழலில் வளர்கின்றன. நம் சுற்றுச்சூழலை வளப்படுத்துகின்றன. குங்கிலியம், மருதம், பாலை, வெட்பாலை மரங்கள் கிட்டத்தட்ட அழிந்து விட்டன. வனப்பகுதியில் கிடைக்கக்கூடிய, மண்ணுக்கு பொருந்தக்கூடிய இத்தகைய மரங்களையே நட வேண்டும்.

எங்கள் கல்லூரியில் 75 வகையான 700 மரங்கள் வளர்கின்றன. இவை பறவைகளின் கூடாக, எங்களுக்கு நிழலாக, சத்தத்தை குறைக்கும் அரணாக, சுத்தமான காற்று தரும் வரமாக உள்ளன. மரங்களிடம் இருந்து வாழ்க்கை முறையை தெரிந்து கொள்ளலாம். இதைத் தான் எங்கள் மாணவர்களுக்கும் கற்றுத் தருகிறோம்.

வீடு, கல்லூரி, அலுவலகம், தொழிற்சாலைகளில் மரங்களின் சருகுகளை சேகரித்து குப்பையை மேலாண்மை செய்யலாம். வருமானமும் கிடைக்கும். மண்புழு உரம் தயாரிப்பு முறையை இலவசமாக கற்றுத் தருகிறோம், என்றார்.

இவரிடம் பேச: 99941 08836.

பாண்டிய நாடு நிர்வாகம் நீதிமன்றம்
மதுரை
H.M.O.P. No. 88/2016
V தினகர்
த/பெ. வேங்கடசாமி
40-1-77, ஞானஒளிவுபுரம்

தினமலர்
DINAMALAR
03-04-2016 பக்கம் எண்: 11

# பேராசிரியர்களுக்கு கற்பித்தல் பயிற்சி

மதுரை, ஏப். 3—

மதுரை தெப்பக்குளம் தியாகராஜர் கல்லூரியில் பேராசிரியர்களுக்கான கற்பித்தல் பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடந்தது.

கல்லூரித் தலைவர் கருமுத்து கண்ணன் தலைமை வகித்தார். முதல்வர் எயினி வரவேற்றார். பேராசிரியர்களின் கற்பித்தல் திறனை மேம்படுத்தும் விதம் மாணவர்களுக்கு கல்வி கற்பிக்கும் விதத்தில் புதுமைகளை புகுத்துதல், கற்றுக் கொடுக்கும் போது பின்பற்ற வேண்டிய நெறிமுறைகள் போன்ற தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன. பாரதியார் பல்கலை இயக்குனர் வெங்கடாபதி, 'நாக்' குழுவின் ஆலோசகர் மதுகர் பயிற்சியளித்தனர்.

பல்கலைக்கழக மானியக் குழு துணைத்தலைவர் தேவராஜ், மதுரை காமராஜ் பல்கலை பதிவாளர் [பொறுப்பு] முத்துமாணிக்கம், பேராசிரியர்கள் ரவி, பாண்டியராஜா மற்றும் பலர் பங்கேற்றனர்.

THE HINDU
11-04-2016 Page No : 3

## Annual Day

The 67th Annual Day of Thiagarajar College was celebrated on March 28. Nellai S. Muthu of ISRO, Thiruvananthapuram, the chief guest, wanted the students to nurture lateral thinking and think out of the box. College secretary K. Thiagarajan welcomed the gathering. Principal M. Eyini presented the annual report. K. Karunamoorthy, Head , Department of Tamil, and M. Ganesan, Associate Professor, Department of Chemistry, who were retiring from service, were honoured by president Karumuttu T. Kannan. Cash awards and mementos were presented to teachers who secured major projects and published research papers. Students were also given prizes for academic proficiency. R. Srinivasan, Dean, proposed a vote of thanks.

தினமலர்
DINAMALAR
16-04-2016 பக்கம் எண்: 15

# THIAGARAJAR COLLEGE

An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University
(Re-Accredited with 'A' Grade by NAAC)
139 & 140 Kamarajar Salai, Teppakulam, Madurai-625 009, Tamil Nadu, India
Website: www.tcarts.in, E-mail: principaltcarts@gmail.com Phone: 0452-2311875

## ADMISSION NOTICE 2016 - 2017

**Applications are invited for admission to the following Aided Courses**

### UNDERGRADUATE COURSES

**B.A.** Tamil, English & Economics (Tamil Medium)

**B.Sc.** Mathematics, Physics, Chemistry, Botany, Microbiology & Computer Science
(Part-I: Tamil / French / Hindi. Part-II: English for B.A., B.Sc., & B.Com.,)

**B.Com.** **B.B.A.**

### POST GRADUATE COURSES

(Candidates awaiting final semester results in April / May 2016 can also apply)

**M.A.** Tamil*, English* & Economics@
*Students who have studied Tamil/English under Part I/II are also eligible to apply for admission in M.A. Tamil and M.A. English respectively
@ B.Com., B.B.A., B.A., Corporate secretaryship and B.B.M. Students are also eligible to apply for admission in M.A. Economics

**M.Sc.** Mathematics, Physics, Chemistry, Botany** & Zoology
**B.Sc., Industrial Microbiology / Environmental Biology students are also eligible to apply for admission in M.Sc., Botany

**M.Phil.** Tamil, English, Botany & Zoology

**Ph.D** Tamil, English, Economics, Commerce, Mathematics, Physics, Chemistry, Botany, Zoology and MHRD National centre of excellence.

Cost of Application: **Date of Issue of Applications – 27.04.2016 (Wednesday)**

| COURSES | IN PERSON | BY POST | DOWNLOADED |
|---|---|---|---|
| U.G | Rs.25 | Rs.50 | Rs.50 |
| P.G / M.Phil | Rs.40 | Rs.65 | Rs.65 |

Applications can be obtained through post by sending M.O. or D.D for Rs. 50/- (UG) and for Rs. 65/- (PG & M.Phil) drawn in favour of "The Principal, Thiagarajar College, Madurai-9". The filled in applications should reach the college on or before the last date.

Application can also be downloaded from the website, www.tcarts.in and the filled in applications along with a D.D for Rs.50/- for UG and Rs.65/- for PG/M.Phil courses drawn in favour of "The Principal, Thiagarajar College, Madurai-9", should reach the college on or before the last date.

Candidates can also apply online after getting Mark Statements (+2 for UG)/ 5Semesters of UG for PG/ 3Semesters of PG for M.Phil) and after taking the D.D. They should submit the required data online to generate the filled-in format that can be printed out. The hard copy, along with the D.D, should reach the college on or before the last date.

| Last date for the receipt of filled-in applications | |
|---|---|
| UG. Courses | 10 Days after the publication of Tamilnadu State Board +2 Examination result |
| P.G. Courses | 17th May 2016 |
| M.Phil | 17th May 2016 |

Admission to PG/M.Phil Courses would be based on results of first five / three Semesters of UG and PG Courses respectively. The list of selected / Wait-listed Candidates for all courses will be available in the College Website after the due date.

Ph.D., (part time & full time) admission will be based on an entrance exam conducted in the campus twice a year (August & January)

**Separate Hostels for Boys and Girls available inside the campus. College re-opens on 16-06-2016**

Place: Madurai
Date : 16-04-2016

Dr. M. Eyini
Principal

Karumuttu K. Thiagarajan.
Secretary

**தினமலர்**
**DINAMALAR**

17-04-2016 பக்கம் எண்: 11



மதுரை தியாகராஜர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கோவை ஹபாசிட் லகோகா நிர்வாக இயக்குனர் சுப்ரமணியம் மாணவிக்கு சான்றிதழ் வழங்கினார். வலமிருந்து, கல்லூரி செயலாளர் தியாகராஜன், முதல்வர் எயினி.

# தாய்மொழி கற்றால் தான் வெற்றி பெற முடியும்

## விழாவில் தகவல்

மதுரை, ஏப். 17 —

''தாய்மொழி கற்றால் தான் வாழ்வில் வெற்றி பெற முடியும்,'' என, மதுரை தியாகராஜர் கல்லூரி பட்டமளிப்பு விழாவில் கோவை ஹபாசிட் லகோகா நிறுவன நிர்வாக இயக்குனர் சுப்ரமணியம் தெரிவித்தார்.

மாணவர்களுக்கு பட்டங்களை வழங்கி அவர் பேசியதாவது: தாய்மொழியை முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும். தாய்மொழியை படிக்காமல் பிறமொழியை படிப்பதால் மட்டுமே வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது. அமெரிக்கா, இங்கிலாந்தில் ஆங்கிலம் தான் தாய்மொழி. இந்தியர்களின் வருமானம் அதிகம். தாய்மொழியில் கற்றால் தான் பிற மொழிகளிலும் சாதிக்க முடியும். நீங்கள் எந்த வேலை செய்தாலும் அதில் சிறப்பு பெறும் அளவிற்கு பணியாற்ற வேண்டும். வாழ்க்கையில் பணத்தால் சந்தோஷம் மட்டுமே வருவதில்லை. படித்ததை பயன்படுத்தி தான் வெற்றி பெற வேண்டும் என்பதில்லை, என்றார். கல்லூரி செயலாளர் தியாகராஜன் வரவேற்றார். முதல்வர் எயினி, டீன் கனகசபை பங்கேற்றனர்.

தினமலர்
DINAMALAR
17-04-2016 பக்கம் எண்: 1

# THIAGARAJAR COLLEGE

An Autonomous Institution Affiliated to Madurai Kamaraj University
(Re-Accredited with 'A' Grade by NAAC)
139 & 140 Kamarajar Salai, Teppakulam, Madurai-625 009, Tamil Nadu, India
Website: www.tcarts.in, E-mail: principaltcarts@gmail.com Phone: 0452-2311875

## Self Financed Courses: Admission Notice 2016 - 2017

### Applications are invited for admission to the following Courses

| COURSES | ELIGIBILITY |
|---|---|
| 1. B.A. English | Pass in +2 |
| 2. B.A. Economics (English Medium) | Pass in +2 |
| 3. B.Com | Pass in +2 with III & IV Group |
| 4. B.Com (Professional Accounting) | Pass in +2 with III & IV Group |
| 5. B.B.A | Pass in +2 with III & IV Group |
| 6. B.C.A | Pass in +2 with Mathematics / Computer Science/ Business Mathematics/ Statistics as one of the subject |
| 7. B.Sc., Information Technology | Pass in +2 with Mathematics / Computer Science |
| 8. B.Sc., Mathematics | Pass in +2 with Mathematics |
| 9. B.Sc., Computer Science | Pass in +2 with Computer Science / Mathematics |
| 10. B.Sc., Biotechnology | Pass in +2 with Biology / Botany / Zoology as one of the subject |
| 11. B.Sc., Microbiology | Pass in +2 with Science Stream |
| 12. B.Sc., Psychology | Pass in +2 with Academic Stream |
| 13. M.A., (H.R.M) (Human Resource Management) | Any Degree |
| 14. M.Com*, Finance | B.Com., |
| 15. M.Sc., Microbiology | B.Sc., in Microbiology / Zoology / Botany / Industrial Microbiology / Biology or Life science / Bio Chemistry / Biotechnology / Agriculture |
| 16. M.Sc., Biotechnology | B.Sc., in any discipline of Life Sciences, Biosciences / Agricultural / Veterinary / Fishery Sciences / Pharmacy or Bachelor of Medicine & Bachelor of surgery or Equivalent examination |
| 17. M.Sc., Computer Science | B.Sc., Computer Science / Any Degree with at least two papers in Mathematics |
| 18. M.Sc., Chemistry (Special) | B.Sc., Chemistry |
| 19. M.Phil., Commerce | M.Com / MFC |
| 20. M.Phil., Management | M.Com / MFC / M.H.R.D / MBA |
| 21. M.Phil., Economics | M.A., Economics / M.Sc., Mathematical Economics |
| 22. M.Phil., Mathematics | M.Sc., Mathematics |
| 23. M.Phil., Physics | M.Sc., Physics |
| 24. M.Phil., Chemistry | M.Sc., Chemistry |
| 25. M. Phil., Computer Science | M.Sc., in Computer Science/MCA. Candidates should have Studied Mathematics at least in +2 level. |

* ICWAI Integrated
# (Subject to affiliation of Madurai Kamaraj University)

**Date of Issue of Applications: 27.04.2016 (Wednesday)**
(Candidates awaiting final semester results in April / May 2016 can also apply for PG/M.Phil., Courses)
Applications can be had from the office by cash in person, or by post through MO/ DD or downloaded from website: www.tcarts.in from 27.04.2016

Cost of Application :

| COURSES | IN PERSON | BY POST | DOWNLOADED |
|---|---|---|---|
| U.G | Rs.100 | Rs.125 | Rs.125 |
| P.G. / M.Phil | Rs.250 | Rs.275 | Rs.275 |

A demand draft for the required amount in favour of "The Principal, Thiagarajar College, Madurai-9" should be enclosed with the downloaded application form.
Candidates can also apply online after getting mark Statements (+2 for UG /5Semesters of UG for PG/3Semesters of PG for M.Phil) and after taking the D.D, they should submit the required data online to generate the filled-in format that can be printed out. The hard copy, along with the D.D, should reach the college on or before the last date.

**Last date for the receipt of filled – in applications**

**U.G. Courses:** 10 days after the publication of Tamilnadu Stateboard +2 Examination results.
**P.G/M.Phil Courses: 17.05.2016:**
The list of selected / wait-listed candidates for all the Courses will be available in the college website after the due date.

**Admission to PG/M.Phil courses would be based on results of first Five / Three Semesters of UG and PG courses respectively.**

**Separate hostels for boys & girls available inside the campus. College re-opens on 16-06-2016**

Place: Madurai
Date : 17-04-2016

Dr. M. Eyini
Principal

Karumuttu K. Thiagarajan.
Secretary

THE HINDU
18-04-2016 Page No : 2

CAMPUS CONNECT

## "Do your best"

Some say earning money is success. But success comes by doing the best in any given job, according to Iakoka N. Subramanian, vice-president of Indian Chamber of Commerce and Industry, Coimbatore, at the 33rd Graduation Day of Thiagarajar College, Madurai, on April 16.

"English language may be the universal language, but one must be well versed in one's mother tongue," Mr. Subramaniam said.

Mr. Subramanian urged the students to do their best in their job and earn a good reputation.

The rank holders from various departments were honoured with medals and trophies by the chief guest.

K. Thiagarajan, secretary, presided over the function.

The Department of English of Thiagarajar College, Madurai, organised a women empowerment camp in the form of a workshop on handicrafts and cottage industries for the woman residents of Mukkudi village on March 17. M. Phil, PG and UG students of the department trained over 50 women in making plastic wire baskets, quelling, muffler making, doll making, embroidery and mehandi designing.

The workshop was inaugurated by A. Pappiah, panchayat president.

The department provided materials for women to practise the craft taught to them.

V. Subathra Devi proposed a vote of thanks.



PROUD MOMENT: N. Subramanian, vice-president of Indian Chamber of Commerce and Industry, Coimbatore, presenting a certificate to a visually challenged student at the Graduation Day of Thiagarajar College in Madurai.

தினமணி
www.dinamani.com
01-07-2016 பக்கம் எண்: 4

# பிரச்னைகளை கண்டு பயப்படாமல் துணிந்து எதிர்கொள்ள வேண்டும்

**சுவாமி கமலாத்மானந்தர்**



வீரமரணமடைந்த விமானப்படை வீரர் பிரவீனின் நினைவு நாளை முன்னிட்டு, அரசுப் பொதுத் தேர்வில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகளை வழங்குகிறார் மதுரை ராமகிருஷ்ண மடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தர். உடன் தேசிய மாணவர்படை மதுரை கர்னல் தியோபா (வலது ஓரம்) மற்றும் பேராசிரியை ராம மலர்விழிமங்கையர்க்கரசி, பிரவீனின் தாயார் மஞ்சுளா உள்ளிட்டோர்.

மதுரை,ஜூன் 30: மாணவ, மாணவியர் பிரச்னைகளைக் கண்டு பயப்படாமல் அதை துணிந்து எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தை பெறவேண்டும் என மதுரை ஸ்ரீராமகிருஷ்ணமடத்தின் தலைவர் சுவாமி கமலாத்மானந்தர் கூறினார்.

கடந்த 2013 ஆம் ஆண்டில் உத்தரகாண்ட் மாநிலத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் போது மீட்புப் பணியில் ஈடுபட்ட ஹெலிகாப்டர் பைலட் கேப்ரவீன் வீரமரணடைந்தார். அவரது மூன்றாமாண்டு நினைவாக பத்து மற்றும் பிளஸ் 2 பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் சிறப்பிடம் பெற்ற மாணவ, மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

மதுரையில் வியாழக்கிழமை நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று சுவாமி கமலாத்மானந்தர் பேசியதாவது: மாணவ, மாணவியர் பிரச்னைகளைக் கண்டு பயந்து ஓடக்கூடாது. அவற்றை எதிர்கொண்டு சமாளித்து வெற்றிகொள்ளவேண்டும்.

நாம் பெறும் பணம், பதவி, சொத்துஎன அனைத்துமே இறைவனுக்குரியது. அவற்றை பாதுகாப்பது மட்டுமே நமது கடமை. ஆகவே நமக்கு கிடைக்கும் அனைத்தையும் தொண்டு உள்ளத்தோடு சமுதாய நன்மைக்கு பயன்படுத்தவேண்டும் என்றார்.

நிகழ்ச்சியில் மதுரை, தேனி, திண்டுக்கல், சிவகங்கை, விருதுநகர் மற்றும் மதுரை மாநகராட்சி பள்ளி மாணவ,மாணவியருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பிரவீன் திருவுருவப்படத்துக்கு மதுரை தேசிய மாணவர் படைப் பிரிவு கர்னல் எம்.எஸ்.தியோபா மலர்தூவி மரியாதை செலுத்தினார். டாக்டர் யாழினி செல்வராஜ், தியாகராஜர் கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் ராம மலர்விழி மங்கையர்க்கரசி மற்றும் மகாத்மா பள்ளி முதல்வர் விஜயாகந்தர் ஆகியோர் பைலட் பிரவீன் தியாகத்தை நினைவுகூர்ந்தனர். பிரவீன் தாயார் மஞ்சுளா விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

காவலர்

மதுரை மாநகராட்சியில் ஒரே நாளில்

தினமலர்
DINAMALAR
07-07-2016 பக்கம் எண்: 4

# உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டி

## மதுரை மாணவர்கள் பங்கேற்பு

**மதுரை, ஜூலை 7–**

மதுரை ரைபிள் கிளப்பில் பயிற்சி பெறும் கல்லூரி மாணவர்கள் இருவர் அகர்பைசானில் செப்., 18 ல் நடக்கும் உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்கின்றனர்.

தியாகராஜர் கலைக்கல்லூரியில் 3ம் ஆண்டு பி.எஸ்.சி., பயோடெக்னாலஜி படிக்கும் சர்வேஷ் சொரூப் சங்கர் 2013ல் ஜெர்மனியில் நடந்த உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் பங்கேற்றார். மாநில, தேசிய அளவிலான பல போட்டிகளில் பரிசுகளை குவித்துள்ளார்.

தியாகராஜர் பொறியியல் கல்லூரியில் முதலாண்டு சிவில் படிக்கும் அஜய் நித்தீஷ் தேசிய, மாநில போட்டிகளில் 50 பதக்கங்களை பெற்றுள்ளார்.

இவர்கள் மே மாதம் ஐ.எஸ்.எஸ்.எப்., சார்பில் ஜெர்மனியில் 120 நாடுகள் பங்கேற்ற போட்டியில் பங்கேற்றனர். இதன் தொடர்ச்சியாக செப்., 18 ல் அகர்பைசானில் நடக்கும் உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டிக்கு, புரோன் மற்றும் த்ரீ பொசிஷன் பிரிவுகளுக்காக தயாராகி வருகின்றனர்.



சர்வேஷ்



அஜய் நித்தீஷ்

இவர்கள் கூறியதாவது: தினமும் 3 முதல் 5 மணி நேரம் பயிற்சி எடுக்கிறோம். உலக ஜூனியர் துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்று, நாட்டிற்கு பெருமை சேர்ப்போம். ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்வதே லட்சியம், என்றனர்.

சர்வதேச போட்டிகளில் சில ஆண்டுகளாக மதுரை வீரர்கள் பங்கேற்கும் வாய்ப்புகளை பெற்றுள்ளனர். பதக்கங்கள் கனவுகளையும் இவர்கள் நிறைவேற்றுவர் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.

மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டம் 2016-17

# புறப்படுகிறது புதிய படை!

புதிய கனவுகள்... இனிய இலக்குகள்... நெடிய பயணம்...
விகடன் மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டத்தின் புதிய படை தயார்!
தமிழ் ஊடக உலகத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்களை உருவாக்கிய விகடன் மாணவப் பத்திரிகையாளர் பயிற்சித் திட்டத்தின் 2016-17-ம் ஆண்டுக்கான புதிய மாணவர் பட்டாளம் உற்சாகத்துடன் களமிறங்கிவிட்டது. இந்த வருடத் திட்டத்துக்கு விண்ணப்பித்த 2,686 மாணவர்களில், பல கட்டப் பரிசீலனைகளுக்குப் பிறகு 75 பேர் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். புதியவர்களுக்கான பயிற்சி முகாம், ஜூலை 22, 23, 24 ஆகிய தேதிகளில் சென்னையில் நடைபெறவிருக்கிறது.
இளையவர்களை வரவேற்கிறோம்... வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்

### தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவப் பத்திரிகையாளர்கள்



ச.வெங்கடேஸ்வரன்
பி.எஸ்.என்.ஏ.
பொறியியல் மற்றும்



மா.செந்தில் குமார்
தியாகராசர் கல்லூரி,
மதுரை



வெ.வித்யா காயத்ரி
மதுரை காமராசர்
பல்கலைக்கழகம், மதுரை



க.விக்னேஷ்வரன்
மதுரை சமூக
அறிவியல் கல்லூரி,



உ.சுதர்சன் காந்தி
வேளாண்
தொழில்நுட்பக்
கல்லூரி, தேனி

தினமலர்
DINAMALAR
29-07-2016 பக்கம் எண்: 11

*In remembrance of*

*Kalaithanthai Karumuttu*

**Thiagarajan Chettiar**



சிந்தத்துட் சிவத்தை
வைத்தார்
செந்தமிழ் நாவில்
வைத்தார்
வித்தகம் தொழிலில்
வைத்தார்
விருப்பினைத் தொண்டில்
வைத்தார்

எத்திசைப் புகழும்
வைத்தார்
என்னிலார் வாழ
வைத்தார்
அத்தனாம் தியாகராசர்
அன்னனைக் கருத்துள்
வைப்போம்

1893 - 1974

"His life was an inspiration. His memory is a benediction."

Thiagarajar Mills, Madurai & Branches, VTM Ltd, Virudhunagar

Thiagarajar College of Engineering, Madurai,

Thiagarajar College, Madurai

# THE HINDU

**29-07-2016** **Page No : 5**




*In remembrance of*

*Kalaithanthai Karumuttu*

## Thiagarajan Chettiar

1893 - 1974

"His life was an inspiration. His memory is a benediction."

Thiagarajan Mills, Madurai & Branches, VTM Ltd, Virudhunagar

Thiagarajar College of Engineering, Madurai.

Thiagarajar College, Madurai

தினமணி
www.dinamani.com
30-07-2016 பக்கம் எண்: 3

# கருமுத்து தியாகராஜர் நினைவு தினக் கூட்டம்

மதுரை, ஜூலை 29: கருமுத்து தியாகராஜ செட்டியார் நினைவு தினத்தை முன்னிட்டு தியாகராஜர் கல்லூரியில் சொற்பொழிவு நிகழ்ச்சி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத்தில் நிறுவப்பட்டுள்ள கருமுத்து தியாகராஜர் செட்டியார் நினைவு அறக்கட்டளை சார்பில் தியாகராஜர் கலை அறிவியல் கல்லூரியில் வெள்ளிக்கிழமை சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழறிஞர் இளம்பிறை மணிமாறன் சிறப்புரையாற்றினார். பல்கலைக்கழக சிறப்பு அதிகாரி மு.ரவிச்சந்திரன் வரவேற்று பேசினார். கவியரசு கண்ணதாசன் நற்பணி மன்றம் சார்பில் மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு செயலர் மலரகம் சந்திரன் தலைமை வகித்தார். செயற்குழு உறுப்பினர் ரெ.கார்த்திகேயன் முன்னிலை வகித்தார். மன்றத் தலைவர் ரா.சொக்கலிங்கம், பல்கலைச் செம்மல் என்ற தலைப்பில் பேசினார். கூட்டத்தில், பி.பன்னீர்செல்வம், ஜெ.ரவிசங்கர், டி.ஜேக்கப் ஜெயப்பிரகாஷ், அ.பாலு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

தினமணி
www.dinamani.com
30-07-2016 பக்கம் எண்: 4

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்-தியாகராஜர் கல்லூரி: கருமுத்து தியாகராஜர் செட்டியார் நினைவு அறக்கட்டளை சொற்பொழிவு, நூல் வெளியீடு. தலைப்பு- கருமுத்து தியாகராஜர் செட்டியார் உரைக்கோவை. தொகுப்பாசிரியர்- கருமுத்து க.ஹரி தியாகராஜன், நூல் வெளியிடுபவர்- சுகிசிவம், பெறுபவர்- அசிஸ்டெண்ட் சொலிசிடர் ஜெனரல் ஜி.ஆர்.சுவாமிநாதன், நூல் அறிமுகம்- தியாகராஜர் கல்லூரிச் செயலர் கருமுத்து க.ஹரி தியாகராஜன், நன்றியுரை- மதுரை காமராஜர் பல்கலைக்கழக இக்கால இலக்கியத்துறை தலைவர் வை.ராமராச பாண்டியன், தொல்காப்பியர் அரங்கம், கல்லூரி வளாகம், தெப்பக்குளம், மாலை 6.

தினமணி
www.dinamani.com
31-07-2016 பக்கம் எண்: 3

# பண்பாடு, கலாசாரமே நம்மை காப்பாற்றும்: சுகிசிவம்

மதுரை, ஜூலை 30: பண்பாடு, கலாசாரமே நம்மை காப்பாற்றும் என்றார் ஆன்மிகச் சொற்பொழிவாளர் சுகிசிவம்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழகம் சார்பில் தியாகராஜர் கல்லூரியில் சனிக்கிழமை நடைபெற்ற கருமுத்து தியாகராஜ செட்டியார் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவில், 'சித்தம் அழகியார்' எனும் பொருளில் அவர் பேசியது: நாம் சேர்த்துவைக்கும் செல்வம் கைகொடுக்காது. பண்பாடு, கலாசாரமே நமது பிள்ளைகள் வழியாக நம்மை கடைசிக் காலத்தில் காப்பாற்றும். நான் என்பது நம்மை வெளிக்காட்டும் அடையாளமாக இருக்கவேண்டுமே தவிர, அகங்காரமாகிவிடக் கூடாது. நான் எனும் அகங்காரத்தை விட்டொழித்தால்தான் இறைவனின் அருள்கிடைக்கும். கடந்த காலத்திலிருந்து எதிர்காலத்துக்கு நம்மை இட்டுச்செல்ல குருவருள் தேவை. அந்தக் குருவருளை வழங்குவது இறைவனாக இருக்கலாம். குருவால் தான் நம்மை இறந்த காலத்திலிருந்து எதிர்காலத்துக்கு எடுத்துச்செல்லமுடியும்.



லட்சியத்தில் கவனமுடன் இருப்பவருக்குத்தான் சித்தம் தெளிவாகும். சித்தம் தெளிவானவர்களே அழகிய சித்தம் உடையவர்களாக இருக்கமுடியும். அருளாளர் மாணிக்கவாசகர் தம்மை திருவாசகத்தில் தாழ்த்திக்கொண்டு, இறைவனை சரணடைகிறார்.

கடவுள் அருள் பெற ஏங்கும் ஏக்கத்திலே இருக்கும் இன்பமே நிலையானது என்றார்.

விழாவில், தியாகராஜர் கல்லூரி செயலர் ஹரி தியாகராஜன் தொகுத்த கருமுத்து செட்டியார் உரைக்கோவை நூலின் முதல்பிரதியை சுகிசிவம் வெளியிட மத்திய அரசு தலைமை வழக்குரைஞர் ஜி.ஆர்.சுவாமிநாதன் பெற்றுக்கொண்டார். அருள்மிகு மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில் தக்கார் கருமுத்து தி.கண்ணன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் ம.திருமலை, பேராசிரியர்கள் மு.அருணகிரி, மலர்விழிமங்கையர்க்கரசி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். முன்னதாக பேராசிரியர் காந்திதுரை வரவேற்றார். பேராசிரியர் ராமராஜபாண்டியன் நன்றி கூறினார்.

தினமலர்
DINAMALAR
31-07-2016 பக்கம் எண்: 11

# தியாகராசர் கல்லூரி, மதுரை
## தமிழிசை ஆய்வு மையம்

(தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது)

புகழும் பெருமையும் மிக்க மதுரை தியாகராசர் கல்லூரியில் 2013ஆம் ஆண்டில் தமிழிசை ஆய்வு மையம் தொடங்கப்பெற்றது. மாணவ-மாணவியருக்கான இசைப்பயிற்சி, தமிழிசை ஆய்வு, பழந்தமிழ்ப்பண்ணிசைத் தொகுப்பு என இயங்கிவரும் இத்தமிழிசை ஆய்வு மையம், **இக்கல்வியாண்டு (2016 - 2017) முதல், 'தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின்'** அங்கீகாரம் பெற்று செயல்படத் தொடங்கியுள்ளது.

இத்தமிழிசை ஆய்வு மையத்தில் 1.சான்றிதழ் 2.பட்டயப்படிப்பு ஆகியன அப்பல்கலைக்கழக அங்கீகாரத்தோடு தொடங்கப்படவுள்ளன.

இப்படிப்பில் பயில விரும்புவோர், தியாகராசர் கல்லூரி தமிழிசை ஆய்வு மையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**பாடங்கள், தகுதிகள் பின்வருமாறு**

| சான்றிதழ் படிப்பு (Certificate Course) | பட்டயப் படிப்பு (Diploma Course) |
|---|---|
| அ. வாய்ப்பாட்டு (Vocal)<br>ஆ. வீணை (Veena)<br>இ. மிருதங்கம் (Mridhangam)<br>ஈ. பரத நாட்டியம் (Bharathanatyam) | அ. வாய்ப்பாட்டு (Vocal)<br>ஆ. வீணை (Veena)<br>இ. மிருதங்கம் (Mridhangam)<br>ஈ. பரத நாட்டியம் (Bharathanatyam) |
| காலம் : 6 மாதங்கள்<br>வழி : தமிழ் வழி<br>தகுதி : 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>பயிற்சிக் கட்டணம் : ரூ. 5,000<br>வகுப்புகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் | காலம் : ஓர் ஆண்டு<br>வழி : தமிழ் வழி<br>தகுதி : 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>பயிற்சிக் கட்டணம் : ரூ. 7,000<br>வகுப்புகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் |

**தொடர்புக்கு**

முனைவர் கு.ஞானசம்பந்தன்
ஒருங்கிணைப்பாளர்
தமிழிசை ஆய்வு மையம்

முனைவர் மு.எயினி
முதல்வர்

தியாகராசர் கல்லூரி, மதுரை-9
0452-2311875, 0452-2311922.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
31-07-2016 பக்கம் எண்: 2

# கருமுத்து தியாகராசரின் உரைக்கோவை நூல் வெளியீடு




▲ நிகழ்ச்சியில் கருமுத்து தியாகராசர் உரைக்கோவை நூலை சுகி. சிவம் வெளியிட சட்ட நிபுணர் ஜி.ஆர். சுவாமிநாதன் பெறுகிறார். அருகில் கருமுத்து தி.கண்ணன். கே. ஹரி தியாகராஜன். படம்: ஜி. மூர்த்தி.

■ மதுரை

கருமுத்து தியாகராசரின் உரைக் கோவைகளால் தொகுக்கப்பட்ட புதிய நூல் வெளியீட்டு விழா மதுரையில் நேற்று நடந்தது.

கருமுத்து தியாகராசர் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய முக்கிய உரைகளின் அரிய தொகுப்பாக இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது. மதுரை தியாகராசர் 'கல்லூரியில் நடந்த நூல் வெளியீட்டு விழா வுக்கு கல்லூரித் தலைவர் கருமுத்து தி. கண்ணன் தலைமை வகித்தார்.

இந்த நூலின் தொகுப்பாளரும் தியாகராசர் கல்லூரிச் செயலா ளருமான கே.ஹரி தியாகராஜன் பேசியது: 'கல்வி நிறுவனங்கள், இலக்கிய அமைப்புகள், ஆலை விழாக்கள், மாநாடுகள், நகரத்தார் சங்கங்கள், பொது நிகழ்வுகள், வானொலியில் திராகராசனார் ஆற்றிய முக்கிய உரைகளை தொகுத்து நூலை உருவாக்கினோம். மகாத்மாகாந் திக்கும், ராஜாஜிக்கும் அவர் எழுதிய கடிதங்களும் இணைக்கப் பட்டுள்ளன. வானதி பதிப்பக உரிமையாளர் டி.ஆர்.ராமநாதன் குறுகிய காலத்தில் நூலை வெளியிட்டுள்ளார். முனைவர் இரா. மோகன் தொகுத்தும், பிழைத் திருத்தம் செய்தும், அணிந்துரை வழங்கியும் நூலை உருவாக்க துணைபுரிந்தார். கருமுத்து தியாகராசருக்கு தமிழ் மொழியும், சட்ட நுணுக்கங்களும்தான் மிகவும் பிடித்தவை. இதனால் இந்த நூலை சொற்பொழிவாளர் சுகி சிவம் வெளியிட சட்ட நிபுணர் உதவி சொலிசிட்டர் ஜெனரல் ஜி.ஆர். சுவாமிநாதன் பெற்றுக் கொண்டது மிகவும் பொருத்தமானது என்றார்.

முன்னதாக, சித்தம் அழகியார் என்ற பொருளில் சுகி சிவம் பேசினார். விழாவில் மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் திரளாகக் கலந்துகொண்டனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
31-07-2016 பக்கம் எண்: 2

# தியாகராசர் கல்லூரி, மதுரை
# தமிழிசை ஆய்வு மையம்

(தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தால் அங்கீகரிக்கப்பட்டது)

புகழும் பெருமையும் மிக்க மதுரை தியாகராசர் கல்லூரியில் 2013ஆம் ஆண்டில் **தமிழிசை ஆய்வு மையம்** தொடங்கப்பெற்றது. மாணவ-மாணவியருக்கான இசைப்பயிற்சி, தமிழிசை ஆய்வு, பழந்தமிழ்ப்பண்ணிசைத் தொகுப்பு என இயங்கிவரும் இத்தமிழிசை ஆய்வு மையம், **இக்கல்வியாண்டு (2016 - 2017) முதல், 'தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்தின்'** அங்கீகாரம் பெற்று செயல்படத் தொடங்கியுள்ளது.

இத்தமிழிசை ஆய்வு மையத்தில் **1.சான்றிதழ் 2.பட்டயப்படிப்பு** ஆகியன அப்பல்கலைக்கழக அங்கீகாரத்தோடு தொடங்கப்படவுள்ளன.

இப்படிப்பில் பயில விரும்புவோர், தியாகராசர் கல்லூரி தமிழிசை ஆய்வு மையத்தில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

## பாடங்கள், தகுதிகள் பின்வருமாறு

| சான்றிதழ் படிப்பு (Certificate Course) | பட்டயப் படிப்பு (Diploma Course) |
|---|---|
| அ. வாய்ப்பாட்டு (Vocal)<br>ஆ. வீணை (Veena)<br>இ. மிருதங்கம் (Mridhangam)<br>ஈ. பரத நாட்டியம் (Bharathanatyam) | அ. வாய்ப்பாட்டு (Vocal)<br>ஆ. வீணை (Veena)<br>இ. மிருதங்கம் (Mridhangam)<br>ஈ. பரத நாட்டியம் (Bharathanatyam) |
| காலம் : 6 மாதங்கள்<br>வழி : தமிழ் வழி<br>தகுதி : 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>பயிற்சிக் கட்டணம் : ரூ. 5,000<br>வகுப்புகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் | காலம் : ஓர் ஆண்டு<br>வழி : தமிழ் வழி<br>தகுதி : 8 ஆம் வகுப்பு தேர்ச்சி<br>பயிற்சிக் கட்டணம் : ரூ. 7,000<br>வகுப்புகள்: சனி, ஞாயிறு கிழமைகளில் |

### தொடர்புக்கு

முனைவர் கு.ஞானசம்பந்தன்
ஒருங்கிணைப்பாளர்
தமிழிசை ஆய்வு மையம்

முனைவர் மு.எயினி
முதல்வர்

தியாகராசர் கல்லூரி, மதுரை-9
0452-2311875, 0452-2311922.

**தினமலர்**
**DINAMALAR**

**01-08-2016** பக்கம் எண்: 4

## தியாகராசர் கல்லூரி

மதுரை - 625 009

### ஒப்பந்த புள்ளி அறிக்கை

எமது கல்லூரி வளாகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பழைய கணினிகள், உதிரிகள் மற்றும் ஆய்வுக்கூட பல இன சாமான்களை எடுத்து கொள்ள உயர்ந்தபட்ச டெண்டர் கோரப்படுகிறது. அதற்கான டெண்டர் படிவம் 01.08.16-ல் இருந்து 10.08.16 வரை கல்லூரி வேலை நாட்களில் கல்லூரியின் வளாக அலுவலகத்தில் (139-140, காமராஜர் சாலை, தெப்பக்குளம், மதுரை-625009)ல் பெற்றுக் கொள்ளலாம். பூர்த்தி செய்து சீலிடப்பட்ட டெண்டர் படிவங்கள் 17.08.2016 புதன் கிழமை அன்று பிற்பகல் 03.00 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் கல்லூரி முதல்வர் அவர்களால் திறக்கப்படும்.

முதல்வர்

நாள்: 01.08.2016

**தினமலர்**
**DINAMALAR**

**11-08-2016** பக்கம் எண்: 4




மதுரையில் கல்லூரிகளுக்கு இடையிலான மாநில வாலிபால் போட்டியில் தியாகராஜர், அமெரிக்கன் கல்லூரி அணிகள் மோதின.

பக்கம் எண்: 4

## ரத்த தான முகாம்

மதுரை தியாகராஜர் கல்லூரியில் என்.எஸ்.எஸ்., மற்றும் அரசு மருத்துவமனை சார்பில் கருமுத்து தியாக ராஜர் செட்டியார் நினைவுதின ரத்த தான முகாம் நடந் தது. முதல்வர் எயினி துவக்கி வைத்தார். ஏற்பாடுகளை என்.எஸ்.எஸ்., ஒருங்கிணைப்பாளர் காசி, திட்ட அலு வலர்கள் சித்ரா, முத்துக்குமார், செந்தில், செய்தனர்.

தினமலர்
DINAMALAR

**01-09-2016** பக்கம் எண்: 4

## மெடிக்கல் டூரிசம் வளரும்!

**ஹரிதியாகராஜன், தியாகராஜர் கல்லூரி செயலாளர்**



**திருச்சி,** தஞ்சை, ராமேஸ்வரம், கன்னியாகுமரி, கொடைக்கானல் போன்ற சுற்றுலா தலங்க ளுக்கு மையமாக மதுரை உள்ளது. இதை பயன்படுத்தி சுற்றுலா பேக்கேஜ்களை துவக்கலாம். வெளிநாடுகளுடன் ஒப்பிடுகையில், இந்தியாவில் குறை வான செலவில் தரமான சிகிச்சை கிடைக்கிறது. மதுரையில் மெடிக்கல் டூரிசத்திற்கு நல்ல வாய்ப்புள்ளது. சென்னை, பெங்களூரு போன்ற இடங்களுடன் ஒப்பிடுகையில் மதுரையை சுற்றி ஏராளமான நிலங்கள் உள்ளன. எய்ம்ஸ் போன்ற சர்வதேச தரத்தில் மருத்துவமனைகள் அமையும் போது, மெடிக்கல் டூரிசம் மேலும் வளரும்.

திருமலை நாயக்கர் மகால், காந்தி மியூசியம், அருங்காட்சியகங்களில் முறையான பராமரிப்பு இல்லை. வெளிநாட்டு பயணிகளை கவரும் வகையில் நவீன வசதிகளை செய்ய வேண்டும். வெளிநாடுகளில் சில அருங்காட்சியகங்களுக்கு செல்லும் போது முக்கிய சின்னங் களின் வரலாறுகளை அவரவர் மொழியில் தெரிந்து கொள்ள 'ஆடியோ எனாபல்டு' வசதிகள் உள்ளன. தேவைப்பட்டால் நுழைவு கட்டணங்களை அதிகரித்து, அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தில் இத்தகைய வசதிகளை செய்யலாம்.

தினமலர்
DINAMALAR
03-09-2016 பக்கம் எண்: 1

# செக்யூரிட்டி கார்டுகள்

## உடனடி நேர்முகத் தேர்வு
## (Walk in Interview)

## தியாகராசர் ஆலைக்கு மற்றும்
## தியாகராசர் கலைக் கல்லூரிக்கு
## செக்யூரிட்டி கார்டுகள் தேவை

### தகுதிகள்:

வயது : 25க்கு மேல் 50 வரை
(முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

படிப்பு : தமிழ் நன்கு எழுதப் படிக்கத் தெரிந்திருக்க வேண்டும்.

வேலை : 8 மணி நேரம் (சிப்ட் அடிப்படையில்)

**தகுதி மற்றும் திறமைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும்.**

விருப்பமுள்ளவர்கள் தங்களது சுய கையெழுத்தில் எழுதிய விண்ணப்பத்துடன் சமீபத்திய கலர் பாஸ்போர்ட் சைஸ் போட்டோ மற்றும் அசல் சான்றிதழ்களுடன் கீழ்கண்ட முகவரியில் நேரில் ஆஜராகவும்.

நேர்முகத் தேர்வுக்கு வருபவர்கள் சீருடை மற்றும் தகுதி சான்றிதழ்கள் கொண்டு வர வேண்டும்.

### நேர்முகத் தேர்வு நடைபெறும்

நாள் : 04.09.2016 ஞாயிற்றுக்கிழமை

நேரம் மற்றும் முகவரி

**தியாகராசர் ஆலைக்கு**

காலை 9.00 மணி முதல் 11 மணி வரை
தியாகராசர் மில்ஸ் பிரைவேட் லிமிடெட்
கப்பலூர் - 625 008. மதுரை.
தொலைபேசி: 0452/2482595

**தியாகராசர் கலைக் கல்லூரிக்கு**

காலை 10.30 மணி முதல் பிறபகல் 12.30 மணி வரை
தியாகராசர் கலைக் கல்லூரி
தெப்பக்குளம், மதுரை-625 009.
தொலைபேசி: 0452/2311875

THE HINDU
05-09-2016 Page No : 5

## Freedom struggle

The NCC Army wing, Youth Red Cross Society and Value Education Centre of Thiagarajar College, Madurai, organised a talk on 'Freedom struggle since 1857' on August 20 by V. Swaminathan, president, Netaji National Movement. Mr. Swaminathan recalled the historical events associated with the freedom movement, especially the First War of Independence in 1857. Mr. Swaminathan pointed out that the founder of Thiagarajar College, Karumuthu Thiagarajan Chettiar, himself was a patriot who presided over a public meeting addressed by Netaji, when he visited Madurai. M. Eyini, Principal, delivered the presidential address. K. Kamaraj, M.Phil scholar, welcomed the gathering. Hari Prasad of BCA proposed a vote of thanks.

**தினமலர்**
**DINAMALAR**

**05-09-2016** **Page No : 5**

### சாதிக்க முடியும்

எஸ். யோகலட்சுமி(தியாகராஜர் கல்லூரி): முன்பு இத்தொழில் நுட்பம் மிகவும் கஷ்டம் என எண்ணியிருந்தேன். அது எளிதானது என இங்கு வந்து அறிந்தேன்.



புரோகிராம் அழிந்து விட்டால், அதை கண்டுபிடித்து எளிதாக சரி செய்வதுடன், புதிய சாப்ட்வேர் உருவாக்க முடியும் என்பதை அறிந்து கொண்டேன். எதிர்காலத்தில் இத்துறையில் நிறைய சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையை இந்நிகழ்ச்சி ஏற்படுத்தியுள்ளது.

**தினமலர்**
**DINAMALAR**

**15-09-2016** **பக்கம் எண்: 2**

# கல்லூரியில் கருத்தரங்கு

மதுரை, செப்.15–

மதுரை தியாகராஜர் கல்லூரி வேதியியல் துறை சார்பில் மாநில கருத்தரங்கு நடந்தது.

துறை தலைவர் சுகந்தி வரவேற்றார். முதல்வர் எமினி தலைமை வகித்தார். சிறப்பு விருந்தினர் அழகப்பா பல்கலை பேராசிரியர் மணி சங்கர் பேசியதாவது: தற்போது எல்லா துறைகளிலும் கெமிக்கல்ஸ் பயன்பாடு அதிகரித்துள்ளது. இதனால், சுற்றுச்சூழல் மாசுபடுகிறது. இதை தடுக்க சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காத, தேவையான கெமிக்கல்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும், என்றார்.

மாணவர்கள் வேதியியல் தொடர்பான ஆய்வுக் கட்டுரைகளை சமர்ப்பித்தனர். ஏற்பாடுகளை பேராசிரியர்கள் பிரகாஷ், செல்வக்குமார் செய்தனர்.

தினமணி
www.dinamani.com
19-09-2016 பக்கம் எண்: 3

# சர்வதேச துப்பாக்கிச் சுடும் போட்டி: மதுரை மாணவர்களுக்கு பதக்கம்

மதுரை, செப். 18: ரஷ்யாவில் நடைபெற்று வரும் சர்வதேச துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்திய அணியின் சார்பில் பங்கேற்ற மதுரையைச் சேர்ந்த 2 கல்லூரி மாணவர்கள் வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்களைப் பெற்றுள்ளனர்.



வி.சர்வேஷ் ஸ்வரூப் சங்கர்



அஜெய்நிதிஷ்.

இதுகுறித்து மதுரை ரைபிள் கிளப் கௌரவச் செயலர் எஸ்.வேல்சங்கர் ஞாயிற்றுக்கிழமை விடுத்துள்ள செய்திக்குறிப்பு: அசர்பைசான் நாட்டில் உள்ள கபாலாவில் சர்வதேச அளவிலான துப்பாக்கிச் சுடும் போட்டிகள் நடந்து வருகின்றன. ஐஎஸ்எஸ்எப் ஜூனியர் உலகக் கோப்பைக்கான இந்த துப்பாக்கி சுடும் போட்டியில், இந்திய அணிகள் சார்பில் பங்கேற்க மதுரையைச் சேர்ந்த தியாகராஜர் பொறியியல் கல்லூரி மாணவர் அஜெய்நிதிஷ், தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சேர்ந்த மாணவர் வி. சர்வேஷ் ஸ்வரூப்சங்கர் ஆகியோர் பங்கேற்றனர். இதில் 50 மீட்டர் ஆடவருக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் மாணவர் அஜெய்நிதிஷ் வெள்ளிப் பதக்கத்தையும், வி.சர்வேஷ் ஸ்வரூப் சங்கர் வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுள்ளனர். இப்போட்டியில் மகளிர் பிரிவில் கோவை ரைபிள் கிளப்பைச் சேர்ந்த காயத்திரி 50 மீட்டருக்கான போட்டியில் வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்
DINAMALAR
19-09-2016 பக்கம் எண்: 3



மதுரை தியாகராஜர் கல்லூரியில் 1985 – 2005 ம் ஆண்டு வரை படித்த மாணவர்கள் சந்தித்தனர்.

# முன்னாள் மாணவர் சந்திப்பு

மதுரை தியாகராஜர் கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு கல்லூரி தலைவர் தியாகராஜன் தலைமையில் நேற்று நடந்தது. செயலாளர் தியாகராஜன் முன்னிலை வகித்தார்.

இக்கல்லூரியில் படித்த முன்னாள் துணைவேந்தர் திருமலை, ஐ.ஏ.எஸ்., அதிகாரி ராஜூ, மகாத்மா பள்ளி சீனியர் முதல்வர் பிரேமலதா உட்பட பலர் பங்கேற்றனர். கல்லூரி காலத்தில் நடந்த நிகழ்வுகளை பகிர்ந்துகொண்டனர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
19-09-2016 பக்கம் எண்: 5

கல்லூரி அனுபவங்களே வாழ்க்கையை மேம்படுத்தின

# நினைவுகளை பகிர்ந்த முன்னாள் மாணவர்களின் 'ஆட்டோகிராப்'

என்.சன்னாசி

மதுரை

கல்லூரி அனுபவங்களே வாழ்க்கையை மேம்படுத்தியதுளை, 45 ஆண்டுகளுக்கு முன், மதுரை தியாகராசர் கல்லூரியில் படித்த முன்னாள் மாணவர்கள் சந்தித்து நினைவுகளை பகிர்ந்துகொண்ட ஆட்டோகிராப் நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் மாணவர் சங்க இணைச் செயலாளர் சிவராஜ் ராமநாதன் வரவேற்றார். கல்லூரித் தலைவர் கருமுத்து டி.கண்ணன் பேசியதாவது: தியாகராசர் கல்லூரி பல அரசியல் தலைவர்களையும், 12 ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளையும் உருவாக்கி உள்ளது. இங்கு படித்த பலர், பல்வேறு பெரிய பதவிகளில் உள்ளனர். ஆண்டுதோறும் துறை வாரியாக முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சியை நடத்த வேண்டும் என்றார். சாதனை புரிந்த முன்னாள் மாணவர்களுக்கு நினைவு பரிசுகள் வழங்கப்பட்டன. கல்லூரி செயலர் கருமுத்து தியாகராஜன் உட்பட பேராசிரியர்கள் பங்கேற்றனர்.




▲ முன்னாள் மாணவர் சந்திப்பு நிகழ்ச்சியில் பேசுகிறார் தியாகராசர் கல்லூரி தலைவர் கருமுத்து தி. கண்ணன். படம்: ஆர். அசோக்

இக்கல்லூரி முன்னாள் மாணவரான தமிழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் திருமலை பேசியதாவது:

இக்கல்லூரி எனக்கு இரண்டாம் கருவறை. முன்னாள் என்றால் சிலருக்கு கோபம் வரும். ஆசிரியர்கள் தான் என்னை வடிவமைத்தனர். பேராசிரியர் சப. அண்ணாமலை என்னை ஆய்வு மாணவராக்கி, பேராசிரியர் வாய்ப்பு கிடைக்கச் செய்தார். இக்கல்லூரியில் படித்தபோது, தமிழ்மன்ற நிகழ்ச்சியை நடத்தி ரூ. 25 மிச்சம் கொடுத்தேன். ஆசிரியர் ஒருவர் உன்னை நிதியமைச்சராக்கலாம் என்றார். அந்த ஊக்கமே தஞ்சை தமிழ் பல்கலைக்கழகத்தில் பல்வேறு மாற்றங்களை செய்து, நிதி ஆதாரத்தை உயர்த்த உதவியது என்றார்.

மதுரை மகாத்மா பள்ளிகளின் தலைவர் பிரேமலதா: இக்கல்லூரியை பலமுறை கடக்கும்போது, உள்ளே போகலாமா என நினைப்பேன். முன்னாள் மாணவர் என்ற முறையில் நேரில் அழைத்து பரிசு வழங்கியது மகிழ்ச்சி. இங்கு 2 ஆண்டுகள் எம்ஏ பொருளியல் படித்தேன். வகுப்பில் நாங்கள் 8 பெண்கள். வேணுகோபால் போன்ற ஆசிரியர்கள், எங்களை பாதுகாத்த விதம், இன்று நினைத்தாலும் மனம் நெகிழ்கிறது. பெண்கள் என்பதால் ஸ்டீரைக் நேரத்தில் தனி பாதுகாப்பு அளிப்பர். இங்கு கற்ற மனிதநேயக் கல்வியால், இன்று 10 ஆயிரம் மாணவர்களுக்கு வழிகாட்டும் அளவுக்கு முன்னேறினேன். வாழ்வியலை கற்றுத் தந்தது இக்கல்லூரிதான் என்றார்.

காஷ்மீரில் பணிபுரியும் ஆட்சியர் ராஜு: எனக்கு பாடமெடுத்த ஆசிரியர் ஒருவர் படிப்பது மட்டுமின்றி அடிக்கடி எழுதிப் பார்க்கும்படி கூறுவார். அதுவே என்னை ஐஏஎஸ் ஆக்கியது. எனது மகனுக்கும் இதை சொல்லித் தருகிறேன். இங்குள்ள ஆசிரியர்கள் அனைவரும் வழிகாட்டியாகவே இருந்தனர். மதுரைக்கு வரும்போதெல்லாம் இக்கல்லூரி பக்கம் வந்து செல்வேன் என்றார்.

இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 500-க்கும் மேற்பட்டோர், கல்லூரி வளாகத்தில் ஒருவருக்கொருவர் நலம் விசாரித்தும், தங்களது கடந்த கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டும் மகிழ்ந்தனர். பின்னர் அனைவரும் விடுதியில் மதிய உணவு சாப்பிட்டனர்.

தினமலர்
DINAMALAR
20-09-2016 பக்கம் எண்: 3



அகர்பைசான் நாட்டில் நடந்த உலக ஜூனியர் கோப்பைக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் பதக்கம் வென்ற மதுரையைச் சேர்ந்த அஜய்நித்தீஷ், சந்தோஷ் சொரூப்.

# துப்பாக்கி சுடும் போட்டியில் மதுரை மாணவர்கள் சாதனை

மதுரை, செப். 20-

ஜூனியர் உலக கோப்பைக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் மதுரை மாணவர்கள் இருவர் சாதனை படைத்துள்ளனர். அகார்பைசான் நாட்டில் நடந்த இப்போட்டியில் 50 மீ., ரைபிள் புரோன் குழு பிரிவில் இந்திய அணி சார்பில் மதுரை தியாகராஜர் பொறியியல் கல்லுாரி மாணவர் அஜய் நித்தீஷ் வெள்ளி பதக்கம் வென்றார்.

இதே பிரிவில் இந்தியா 'பி' அணி சார்பில் தியாகராஜர் கல்லுாரி மாணவர் சந்தோஷ் சொரூப் வெண்கல பதக்கம் வென்றார்.

சாதனை படைத்த மாணவர்களை மதுரை ரைபிள் கிளப் சங்க நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள் பாராட்டினர்.

தினமலர்
DINAMALAR
24-09-2016 பக்கம் எண்: 3

## வாழ்த்தி வரவேற்கின்றோம்



உலக இளைஞர் துப்பாக்கி சுடும் போட்டியில் இந்திய நாட்டிற்காக, அரசு அனுப்பிய

# சர்வேஷ் ஸ்வரூப் சங்கர்

தியாகராஜர் கல்லூரி III B.Sc., (BioTech)

ரஷ்யா நாட்டை ஒட்டியுள்ள அஜர்பைஜான் நாட்டின் கபாலா நகரில் கலந்து கொண்டு, மெடல்கள் வென்று வெற்றிகரமாக இன்று இந்தியா திரும்பும் அவரை நல்வரவு கூறி வாழ்த்தி அன்புடன் வரவேற்கின்றோம்.

**S.V.S. சுந்தரமூர்த்தி B.A., B.L.,**

S.V.S.S.வேல் சங்கர் B.A., D.Com., V. சூரஜ் சுந்தர சாங்கர் MBA.,

சொர்ணா வேல்சங்கர் தீப்திகா சூரஜ்

கேதாரிணி வேல்சங்கர்

அன்புடன்

**SVS அக்மார்க் கடலை மாவு**

போன்: 98947 41123, 99444 12616

தினமலர்
DINAMALAR
26-09-2016 பக்கம் எண்: 1

# சைவ சித்தாந்த இலவச பயிற்சி

மதுரை, செப். 26-

மதுரை தியாகராஜர் கல்லூரியில் சைவ சித்தாந்த இலவச பயிற்சி நவ.,21 முதல் நவ.,30 வரை நடைபெறும்.

பொதுநிலை வகுப்பில் பங்கேற்றவர்கள், அதே வகுப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டாம். சிறப்பு நிலை வகுப்பிற்கு விண்ணப்பிக்கவும்.

சிறப்புநிலை வகுப்பில் பங்கேற்றவர்கள், மீண்டும் விண்ணப்பிக்க வேண்டாம். பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும். முதல்வர், தியாகராஜர் கல்லூரி, காமராஜர் சாலை, தெப்பக்குளம், மதுரை-625 009 முகவரிக்கு தபால்தலை, முகவரியுடன் கூடிய உறையை அனுப்பி விண்ணப்பங்களை பெறலாம் அல்லது www.tcarts.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை அக்.,31 க்குள் அனுப்ப வேண்டும் என முதல்வர் எயினி தெரிவித்துள்ளார்.

THE TIMES OF INDIA

26-09-2016 Page No : 3

Madurai Is Turning Into A Hub Of Shooting Competitions In The State

# City's shooting stars have the WORLD IN THEIR SIGHTS

Devanathan.Veerappan
@timesgroup.com

Two young shooters from Madurai, who bagged silver and bronze medals in 50-metre prone posi-on event in the ISSF junior world ap held in Azerbaijan, received a ousing welcome at the valedictory inction of the South Zone Shoot-g Competition organised in the ty. Their victory has given an im-tus to the young aspiring talents Madurai, which is turning into hub of shooting competitions in amil Nadu.

P Ajaey Nithish, 18, and Sarvesh waroop Shankar, 19, won silver id bronze medals respectively at e competition, which was held in abala city on September 18. The ung talents from the Temple City, ho returned home on late Satur-y, were given a thumping recep-on at the valedictory function of aiden zonal shooting competition Madurai, which coincided with eir return.

A friendly balloon shooting com-tition between Ajaey Nithish and s school correspondent Sivaku-ar had unearthed his talent in ooting. The correspondent, a ember of the Madurai Rifle Club, o noticed the student's shooting ills at a school carnival, competed th him and found his hidden po-ntial. When Nithish's father N laniselvan, a businessman, came know about it, he immediately t him in a summer camp in Ma-rai Rifle Club, which helped him ne his skills.

Nithish is now a Second Year Civil student in Thiagarajar llege of Engineering. "I expect a medal in the competition and ve my best shot. The experience standing in the podium cannot explained in words. It felt great win the medal and make the untry proud," he said.

Unlike Nithish, who n a medal in his fa urite category, rvesh won a dal in the same ent although favourite ent is three dition, where al number shots were be given in ne, stand-g and eling po-sitions.

Sarvesh's father S Velshankar, secretary of the Madurai Rifle Club, had inspired him to take up the sports. He has been into the sports from the school days and is currently the state record holder in three position. "I did not think about medals and just wanted to give my level best. It was a satisfying competition. Since the weather in Azerbaijan was similar to that of Madurai, I felt right at home," he said, thanking Thiagarjar College, where he is studying BSc Bio-technology.

Both the young talents have stashed a large number of state-level and national-level medals. Winning medals in Olympic and making the country proud is the ultimate ambition of the two.

Velshankar said he is proud of the achievements of the boys in the international event. "They managed to achieve the fete even without adequate facilities with which most of their competitors would have got trained," he told TOI.





PRIDE OF MADURAI: Tami Nadu shooters dominated the medal tally in the South Zone Shooting Competition. **(Below)** Ajaey Nithish (right) and Sarvesh Swaroop Shankar won silver and bronze medals in the ISSF junior world cup held in Azerbaijan



## Facilities for shooters off the target

Madurai is turning into a hub of shooters, thanks to the efforts put in by the Madurai Rifle Club. Young talents from the district dominate medal tally in the state-level shooting competitions. Similarly, when it comes to the number of participants, there are more number of participants from Madurai in the national shooting competitions. For instance, 38 zonal records were made in the maiden zonal-level competition, which concluded on Sunday. Of which, 19 records were by Tamil Nadu shooters, with 11 from Madurai.

Although the Temple City is producing a large number of talents, the lack of facilities hinder the talents to get world-class training. Shooting tracks with electronic scoring facility, which help the athletes to improve their shooting accuracy, is sorely missing. The facility is available only in Chennai. It takes Rs 5 lakh to set up an electronic track, but without financial support, Madurai Rifle Club could not arrange it.

According to the secretary of Madurai Rifle Club, S Velshankar, it is the shooters from Madurai who bagged most of the prizes even in the state-level competitions. "If 50 shooters from Tamil Nadu take part in a national event, 25 would be from Tamil Nadu. The days where shooters from Madurai taking part in the Olympic is not far away, provided they are better equipped," he said.

A track with electronic scoring facility helps the shooters to achieve accuracy. In conventional tracks with paper targets, like the one in Madurai, the maximum point is 10. Whereas, in electronic tracks, the points are calculated in decimal points, with the maximum point being 10.9. "In international competitions, electronic target is used. It is difficult for us to adopt to that since we practice in paper target. Our shooting accuracy will improve drastically if we practice more in electronic scoring tracks," says Sarvesh, who won a bronze medal in the recently-concluded junior shooting world cup.

In 2014, chief minister J Jayalalithaa had announced shooting range facilities in Chennai, Madurai and Coimbatore at a cost of Rs 40 crore to promote the talent. But they are yet to materialise.

THE HINDU
26-09-2016 Page No : 2

A State-level intercollegiate meet, 'Microbes – 2016,' was organised by the Department of Microbiology, Ayya Nadar Janaki Ammal College, Sivakasi, on September 8. Principal V. Pandiyarajan, in his inaugural address, highlighted the role of student community in nation development. Teams from nine colleges from all over Tamil Nadu participated in the meet in which Thiagarajar College, Madurai, bagged the overall championship. P. Ponmanickam, Head, Department of Microbiology, welcomed the gathering. Dr. Pandiyarajan distributed prizes and certificates to the winners in the valedictory session. P. Maheswari, organising secretary, proposed a vote of thanks.

தினமலர்
DINAMALAR
05-10-2016 பக்கம் எண்: 3

# கருத்தரங்கு

**மதுரை,அக்.5–**

மதுரை தியாகராஜர் கல்லூரியில் இயற்பியல் துறை சார்பில் நியூட்ரினோ தொடர்பான கருத்தரங்கம் நடந்தது.

துறை தலைவர் விஜயலட்சுமி வரவேற்றார். கல்லூரி முதல்வர் எயினி தலைமை வகித்தார். டாடா அடிப்படை அறிவியல் ஆராய்ச்சி மைய விஞ்ஞானி சத்ய நாராயண பீ ஷெட்டி பங்கேற்று பேசினர். பேராசிரியர் சீனிவாசன் நன்றி கூறினார்.

தினமணி
www.dinamani.com
07-10-2016 பக்கம் எண்: 2

# சைவசித்தாந்த இலவச பயிற்சி வகுப்பு

மதுரை, அக். 6: மதுரை தியாகராஜர் கல்லூரியில் இலவச சைவசித்தாந்த பயிற்சி வகுப்பு நடத்தப்பட உள்ளது.

இதுகுறித்து கல்லூரி முதல்வர் மு.எயினி விடுத்துள்ள செய்திக்குறிப்பு:

மதுரை தியாகராஜர் கல்லூரியில் 13 ஆம் ஆண்டாக சைவசித்தாந்த இலவசப் பயிற்சி வகுப்புகள் வரும் நவம்பர் 21 முதல் 30 ஆம் தேதி வரை நடத்தப்படவுள்ளன.

பொதுநிலை, சிறப்புநிலை என இரு வகைகளில் பயிற்சி வகுப்புகள் அமைந்திருக்கும். ஒரு வகுப்பில் பங்கேற்க விண்ணப்பிப்போர் அடுத்த வகுப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டாம். பயிற்சிக்கான பத்து நாள்களிலும் தங்குமிடம், உணவு இலவசம். கட்டணம் ஏதுமில்லை.

விண்ணப்பத்தை அஞ்சல் தலையுடன், முதல்வர், தியாகராஜர் கல்லூரி, 139-140 காமராஜர் சாலை, தெப்பக்குளம், மதுரை-09 என்ற முகவரிக்கு வரும் 31 ஆம் தேதிக்குள் அனுப்பிட வேண்டும் எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமணி
www.dinamani.com

12-10-2016 பக்கம் எண்: 4

# சான்றிதழ் வகுப்புகள் தொடக்கம்

மதுரை, அக். 11: மதுரை தியாகராஜர் கல்லூரியில் உள்ள தமிழிசை ஆய்வு மையத்தில் சான்றிதழ் வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

இங்கு தமிழ்நாடு இசை மற்றும் கவின்கலைப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பு பெற்று வாய்ப்பாட்டு, வீணை, மிருதங்கம், பரதநாட்டியம் ஆகியவற்றில் ஆறுமாத கால சான்றிதழ் வகுப்புகள் மற்றும் ஓராண்டு பட்டய வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

செவ்வாய்க்கிழமை நடைபெற்ற புதிய வகுப்புகளின் தொடக்க நிகழ்ச்சிக்கு கல்லூரிச் செயலர் க.தியாகராஜன் தலைமை வகித்தார். தமிழிசை ஆய்வு மைய ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் கு.ஞானசம்பந்தன் வகுப்புகளின் நோக்கம் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் குறித்து விளக்கினார். கல்லூரி முதல்வர் மு.எயினி வாழ்த்திப் பேசினார். மாணவி வ.லக்ஷனா குழுவினரின் சிறப்பு வீணை இசை நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழிசை ஆய்வு மைய பயிற்சி வகுப்புகளின் ஒருங்கிணைப்பாளர் அ.செந்தில்நாராயணன் நன்றி கூறினார்.

தினகரன்
15-10-2016 பக்கம் எண்: 15

# ஆய்வு கருத்தரங்கு

மதுரை, அக். 15: மதுரை தியாகராசர் கல்லூரி தமிழ்த்துறை சார்பில் வ.சுப.மாணிக்கனார் நூற்றாண்டு விழா ஆய்வு கருத்தரங்கம் நடைபெற்றது.

தமிழ்த்துறை தலைவர் பேச்சிமுத்து வரவேற்றார். கல்லூரி முதல்வர் எயினி தலைமை வகித்தார். உலக தமிழ்சங்க இயக்குநர் சேகர் முன்னிலை வகித்து பேசினார். தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சுந்தரமூர்த்தி, மாணிக்கனாரின் புதல்வியார் தென்றல் அழகப்பன், பேராசிரியர்கள் நடராசன், மோகன், காந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு பேசினர்.




மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடந்த வ.சு.ப.மாணிக்கனாரின் நூற்றாண்டு விழாவில் உலக தமிழ்ச் சங்கத்தின் இயக்குநர் சேகர் பேசினார். அருகில் கல்லூரி செயலாளர் தியாகராசன், முதல்வர் எயினி மற்றும் பேராசிரியர் பேச்சிமுத்து.

THE HINDU
17-10-2016 Page No : 3

## On women's writing

Post Graduate and Research Department of English, Thiagarajar College organised a State-level intercollegiate seminar for undergraduate students on 'Women's Writing: An Abortive self of Broken identity' on 4th October, 2016. Delivering the key note address; Dr. Mary Magdalene Abraham, Associate professor of English, Fatima College stated that the real empowerment of women comes from their own thinking and making their own choices. She insisted that women should write to dismantle myths and misrepresentations made by men in literature. She also added that women must transcend boundaries not by rebelling but by contributing to the society. She pointed out that all feminism comes from the root statement of Simon de Beauvoir, " One is not born a women, but becomes a women".

Earlier, Dr.Eyni, Principal, Thiagarajar College said that students should utilise the forum to exhibit their presentation skills.

Dr.V.Subathra Devi, Head of the Department of English, in her welcome address traced the history of women's writing from Fanny Browne to Bronte sisters who had struggled to sustain their identity in the literary world. As many as 75 papers were presented during the seminar.

தினமலர்
DINAMALAR
26-10-2016 பக்கம் எண்: 12



மதுரை தெப்பக்குளத்தில் குப்பைகளை சேகரிக்கும் கல்லூரி மாணவர்கள். அடுத்த படம்: மூடை மூடையாக சேர்ந்த குப்பைகள்.

# வறண்ட தெப்பக்குளம் 'கிளீன்' இணைந்த கரங்களால் விமோசனம்

மதுரை, அக். 26–

மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் குவிந்திருந்த பிளாஸ்டிக் மற்றும் குப்பைகளை அகற்றும் பணியில் கல்லூரி மாணவர்களுடன் பொதுமக்கள் இணைந்து ஈடுபட்டனர்.

மதுரை இயற்கை பாதுகாப்பு நிறுவனம் தலைவர் செல்வம் ராமசாமி தலைமை வகித்தார். சமயநல்லூர் இளைய தலைமுறை அமைப்பின் நிர்வாகி சுருளி முத்து முன்னிலை வகித்தார். தியாகராஜர் கல்லூரி மாணவர்கள், மதுரை காமராஜ் கல்லூரி தொடர்பியல் துறை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் தெப்பக்குளத்தில் கிடந்த குப்பைகளை முழுமையாக அகற்றினர். தொடர்பியல் துறை தலைவர் நாகரத்தினம் ஒருங்கிணைப்பு செய்தார்.

தெப்பக்குளத்தில் பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகளை பொதுமக்கள் மற்றும் கடைக்காரர்கள் கொட்டக்கூடாது, திறந்தவெளி கழிப்பிடமாக பயன்படுத்தக்கூடாது, சுகாதாரமான பகுதியாக பயன்படுத்த வேண்டும், நீர் நிரப்பி எப்போதும் படகு சவாரிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தினர்.

இந்து தமிழ் திசை
24-10-2016 பக்கம் எண்: 4

# மாரியம்மன் தெப்பக்குளத்தை சுத்தம் செய்த மாணவர்கள்

**மதுரை**

மதுரை காமராஜர் பல்கலைக் கழகம், தியாகராஜர் கல்லூரி மாணவ, மாணவிகள் மாரியம்மன் தெப்பக்குளத்தை சுத்தம் செய்தனர்.

மதுரை மாரியம்மன் கோயில் தெப்பக்குளம் 304.8 மீ. நீளம் மற்றும் அகலம் கொண்டது. குளத்தின் சுற்றுச்சுவர் 15 அடி உயரம் கொண்டது. வைகை அணையில் இருந்து தண்ணீர் வரும் வகையில் சுரங்கக் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. பகலில் இளைஞர்களுக்கு கிரிக்கெட் விளையாடும் இடமாகவும், மாலையில் பொதுமக்கள் நடைபயிற்சி மேற்கொள்ளும் இடமாகவும் உள்ளது. ஆனால் குப்பைகளை கொட்டுவதற்கும், சிறுநீர் கழிப்பதற்குமே பொதுமக்கள் தெப்பக்குளத்தை பயன்படுத்தி வருகின்றனர். இதனால் அந்த வழியாக செல்வோர் மிகவும் வேதனை அடைந்தனர்.

இந்நிலையில் நீராதாரங்களை தூய்மைப்படுத்தும் பணியில் ஈடுபட்டு வரும் காமராஜர் பல்கலைக் கழக தொடர்பியல் துறை மாணவர்கள் தெப்பக்குளத்தை நேற்று சுத்தம் செய்தனர். இதில் தியாகராஜர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவர்களும் ஈடுபட்டனர். அப்போது குளத்தில் பிளாஸ்டிக் பொருட்கள், குப்பைகளைக் கொட்டாமல் பாதுகாக்க வேண்டும், தெப்பத்தில் சிறுநீர் கழிக்கக் கூடாது. தெப்பக்குளத்தின் தூய்மைக்கு பொதுமக்கள் ஒத்துழைக்க வேண்டும் என விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது.

தொடர்பியல் துறை தலைவர் சுதாகரத்தினம், இயற்கை பாதுகாப்பு நிறுவனத்தை சேர்ந்த செல்வம் ராமசாமி உள்ளிட்டோர் களப்பணியில் ஈடுபட்டனர்.



▲ மதுரை மாரியம்மன் தெப்பக்குளத்தில் தூய்மைப் பணியில் ஈடுபட்டுள்ள காமராஜர் பல்கலைக் கழகம், தியாகராஜர் கல்லூரி மாணவ, மாணவிகள். படம்: எஸ்.கிருஷ்ணமூர்த்தி

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
26-10-2016 பக்கம் எண்: 21

# ஆலை அரசர் கருமுத்து தியாகராசரின் உரைக்கோவை

தொழில், கல்வி, இலக்கியம், கலை, தமிழ், அரசியல் எனப் பல்வேறு துறைகள் குறித்து ஆழமாக சிந்தித்தவர் கருமுத்து தியாகராசர். இவர் தமிழ் மற்றும் சைவ சமயத்திற்கும் மிகுந்த பங்களிப்பை ஆற்றி உள்ளார். பல்வேறு ஊர்களில் நடந்த விழாக்கள் மற்றும் அமைப்புகள் நடத்திய நிகழ்ச்சிகளில் அவர் ஆற்றிய உரைகளை, க.ஹரி தியாகராசன் புத்தகமாக தொகுத்துள்ளார்.




தாய்மொழி மூலமாக கல்வி கற்பிக்க வேண்டியதன் அவசியம், பெண் கல்வி, தமிழ் இலக்கண, இலக்கியங்கள், பள்ளியே மக்களை உருவாக்கும் இடம் என்பதால் தீய பழக்க வழக்கங்கள் அவர்களை அணுகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்பன போன்ற கருத்துக்களை இந்த நூலில் நூலாசிரியர் விரிவாக விளக்கி உள்ளார். தமிழும், தமிழரும், தமிழ்நாடும் முன்னேறுவதற்கான வழிமுறைகளைக் கூறும் நூலாக இந்த நூல் அமைந்துள்ளது.

(வெளியீடு: வானதி பதிப்பகம், 23, தீனதயாளுதெரு, தியாகராயநகர், சென்னை-17; விலை: ரூ.200

தினமலர்

DINAMALAR

29-11-2016

# Thiagarajar College

(An autonomous institution affiliated to Madurai Kamaraj University)
(Re-accredited with A Grade by NAAC)
139 & 140 Kamarajar Salai, Teppakulam, Madurai-625 009,
Post Box No.107 Phone: 0452 2311875

## WALK - IN INTERVIEW ON 05.12.2016 AT 10.00 a.m.

| Sl.No. | POST* | Qualification |
|---|---|---|
| 1 | Lecturer in English (Self financed) | 1st Class in M.A. English., M.Phil., Ph. D., / SLET / NET preferable |
| 2 | Temporary Lecturer in Economics | 1st Class in M.A. Economics., M.Phil., Ph. D., / SLET / NET preferable |
| 3 | Lecturer in Commerce (Self financed) | 1st Class in M.Com. or MFC., M.Phil., Ph. D., / SLET / NET preferable |
| 4 | Temporary Lecturer in Mathematics | 1st Class in M.Sc., Mathematics. M.Phil., Ph.D., / SLET / NET preferable |
| 5 | Lab Assistant in Computer Science | B.Sc., Computer Science / B.C.A./ B.Sc., I.T. (Local candidates only) |
| 6 | Library Assistant (General Library) | Any Degree with B.Lib.Sci../M.Lib.Sci with computer knowledge (Local candidates only) |

*Consolidated pay
Date: 29.11.2016

Dr.M.Eyini
Principal

Karumuttu K. Thiagarajan
Secretary

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
01-12-2016 பக்கம் எண்: 4

# தியாகராஜர் கல்லூரி பருவத்தேர்வு முடிவுகள்

மதுரை

மதுரை தியாகராஜர் கல்லூரி (தன்னாட்சி) நவம்பர் 2016 பருவத்துக்கான எம்.பிஎல். பட்டமேற்படிப்பு மற்றும் பட்டப்படிப்புகளுக்கான அனைத்து பாடப்பிரிவுகளுக்கும் நடைபெற்ற தேர்வு முடிவுகள் www.tcarts.in என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளன.

மறுமதிப்பீடு, மறுகூட்டல், விடைத்தாள் நிழற்பட பிரதிக்கு விண்ணப்பித்தல் பற்றிய விவரங்களும் இணையதளத்தில் கொடுக்கப்பட்டுள்ளன என்று தேர்வாணையர் பா.அறிவழகன் தெரிவித்துள்ளார்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை
01-12-2016 பக்கம் எண்: 3

# மதுரையில் சைவ சித்தாந்தம் பயின்ற மலேசிய பெண்கள்

● குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் சான்றிதழ் வழங்கினார்

■ மதுரை

மதுரையில் சைவ சித்தாந்தம் பயின்ற மலேசியா, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் மற்றும் நாட்டின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களுக்கு குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் சான்றிதழ் வழங்கினார்.

மதுரை தியாகராஜர் கல்லூரியில் ஆண்டுதோறும் சைவ சித்தாந்தப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 13-ம் ஆண்டு பயிற்சி நிறைவு விழாவையொட்டி நேற்று சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்த ஆண்டு மலேசியா, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் மற்றும் ஆந்திரா, கர்நாடகா, புதுடெல்லி உட்பட பல்வேறு மாநிலங்கள், தமிழகத்தின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 100-க்கும் மேற்பட்டோர் பயிற்சி பெற்றனர்.

இவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கி குமாரசாமி தம்பிரான் சுவாமிகள் பேசுகையில், 'சைவ மதம்தான் அனைத்து தரப்பினரையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. சைவத்துக்கு மேல் சமயம் வேறில்லை என்பர். இங்கு பயிற்சி பெற்றவர்கள் சைவ சித்தாந்தத்தின் பழச்சாறை அருந்தியுள்ளீர்கள். உங்களால் இந்த சமூகம் சிறக்கும் வகையில் சித்தாந்தத்தை உலகமெங்கும் பரப்புங்கள்" என்றார். நிகழ்ச்சிக்கு தலைமை வகித்த கல்லூரி செயலர் க.ஹரிதியாகராஜன் பேசுகையில், "எந்த அளவுக்கும் எளிமையாக வணங்கியும் இறைவனைத்தேட அனுமதித்துள்ளது சைவ சமயம். இதுவே சிறந்தது என்பது ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

இங்கு தரப்படும் பயிற்சியின் மேன்மையை அறிந்தே பல்வேறு நாடுகளிலிருந்தும் வந்துள்ளனர். இந்த பயிற்சியால் சமூகத்தில் அமைதியும், பக்தியும் செழிக்கட்டும். ஆண்டுதோறும் மேலும் அதிகமானோர் பயிற்சிபெற வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும்" என்றார்.

கல்லூரி முதல்வர் எபினி, தமிழ்த்துறை தலைவர் பேச்சிமுத்து, இயக்குநர் ஆனந்தராசன் உட்பட பலர் பங்கேற்றனர்.



▲ மதுரை தியாகராஜர் கல்லூரியில் நடைபெற்ற சைவ சித்தாந்தப் பயிற்சியில் பங்கேற்றவர்களுடன் குமாரசாமி தம்பிரான் சுவாமிகள்.

படம்: எஸ். கிருஷ்ணமூர்த்தி.

## வெளிநாடுகளில் சைவத்தை வளர்ப்போம்

மலேசியாவைச் சேர்ந்த கோகிலவாணி, ரஷிகா, நித்யாமதி, பவானி, தங்கரத்தினம் உள்ளிட்ட பலரும், ஆஸ்திரேலியாவை சேர்ந்த அன்புஜெயாவும் பயிற்சி பெற்றனர். இவர்கள் கூறுகையில், "சைவ சித்தாந்தத்தை இந்த அளவுக்கு ஈடுபாட்டுடன் கற்றது பிரமிக்கச் செய்துள்ளது. குருகுலம் போன்ற இக்கல்விமுறை, எங்களின் வாழ்க்கை நெறிகளையே மாற்றியுள்ளது. எங்கள் நாட்டு மக்களுக்கு இப்பயிற்சியை அளித்து சைவத்தை வளர்ப்போம். ஆண்டுதோறும் இங்கு வந்து மேலும் பயிற்சிகளை பெற அனுமதிக்க வேண்டும். தியாகராஜர் கல்லூரியில் நாங்கள் மட்டுமின்றி, எங்கள் குழந்தைகளையும் தமிழ் கற்க வைக்க விரும்புகிறோம்" என்றனர்.

தினமணி
www.dinamani.com
14-12-2016

# கல்லூரி மாணவ, மாணவியருக்கு கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டி

**ஆட்சியர் அறிவிப்பு**

**மதுரை, டிச. 13:** மதுரை மாவட்டத்தில் கல்லூரி மாணவ, மாணவியருக்கு தமிழில் கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் வரும் டிசம்பர் 20 ஆம் தேதி நடைபெறுகின்றன.

இதுகுறித்து போட்டிக்கான ஆலோசனைக் குழு தலைவர் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் விடுத்துள்ள செய்திக்குறிப்பு: தமிழ் வளர்ச்சித்துறை சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு கவிதை, கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் வரும் 20 ஆம் தேதி நடைபெறவுள்ளன. தியாகராஜர் கல்லூரியில் காலை 9 மணி முதல் போட்டிகள் நடத்தப்படும். போட்டியில் பங்கேற்போர் விண்ணப்பத்தை அந்தந்தக் கல்லூரி முதல்வர்களிடமிருந்து பெறலாம். பூர்த்தி செய்த விண்ணப்பத்தை கல்லூரி முதல்வர்கள் மூலம் மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகத்துக்கு அனுப்பவேண்டும். ஒரு கல்லூரியில் இருந்து ஒரு போட்டிக்கு ஒரு மாணவர் என 3 மாணவர்களே பங்கேற்க முடியும். கல்லூரியிலிருந்து ஒரே ஒரு மாணவர் மட்டும் பங்கேற்றால், அவர் 3 போட்டிகளிலும் பங்கேற்கலாம்.

தமிழ் வளர்ச்சி துறையிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட உறைகளில் உள்ள போட்டிகளின் தலைப்பு மாணவர்கள், நடுவர்கள் முன்னிலையில் பிரித்து தெரிவிக்கப்படும். ஒவ்வொரு போட்டிக்கும் மாவட்ட அளவில் முதல் பரிசாக ரூ.10,000, இரண்டாம் பரிசாக ரூ.7,000, மூன்றாம் பரிசாக ரூ.5,000 என வழங்கப்படும். மாவட்ட அளவில் முதல் பரிசு பெறுவோர் மாநில போட்டிக்கு பரிந்துரைக்கப்படுவர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

தினமலர்
DINAMALAR
18-12-2016

# பார்வையற்ற மாணவரின் கலையாற்றல்

## ஓவியம், நடனத்தில் அசத்தல்

மதுரை, டிச. 18–

கலைகள் மீதான ஆர்வம் இருந்தால் எந்நிலையில் இருந்தாலும் அதில் சாதிக்க முடியும் என்பதை நிரூபித்து வருகிறார் மதுரை தியாகராஜர் கல்லூரி மாணவர் ராஜேஷ் கிருஷ்ணன்.

பிறப்பிலேயே பார்வை குறைபாடு உள்ள இவர், சுந்தரராஜன் பட்டி பார்வையற்றோர் பள்ளியில் படித்து, தற்போது தியாகராஜர் கல்லூரியில் இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் படித்து வருகிறார்.

படிப்படியாக பார்வை குறைந்து வரும் இருவருக்கு இப்போது 25 சதவீதம் மட்டுமே பார்வை உள்ளது. ஓவியங்கள் வரைவதில் அதிக ஆர்வம் உள்ளது.

நூற்றுக்கணக்கான படங்களை வரைந்துள்ளார். என்ன மனநிலையில் இருக்கிறாரோ அதற்கு ஏற்ப படங்களை வரைகிறார். நடனத்திலும் ஆர்வமுடன் உள்ளார். பார்வையற்றோர் நூலகத்திலும் உறுப்பினராக உள்ளார்.


ராஜேஷ் கிருஷ்ணன்

"பரமக்குடி சொந்த ஊர். அப்பா முருகேசன். கூலித் தொழிலாளி. நடனம் இயல்பாகவே எனக்கு வருகிறது. தனி நடனம் ஆடுவேன். ஆடுவதற்கு சில மேடைகள் தான் எனக்கு கிடைத்திருக்கிறது. டான்ஸ் மாஸ்டர் ராகவா லாரன்ஸ் எனக்கு பிடிக்கும். அவரை சந்திப்பதற்கான வாய்ப்பை தேடி வருகிறேன். எந்த ஓவியங்களையும், காட்சிகளையும் நான் பார்த்து வரைவதில்லை. மனதில் தோன்றுவதை வரைவேன்.

வாழ்க்கையில் ஒரு நிமிடத்தை கூட வீணாக்கக்கூடாது என நினைப்பேன். அதற்கு ஏற்ற வகையில் இசை, நடனம், ஓவியம், படிப்பு என எதிலாவது ஈடுபட்டு கொண்டிருப்பேன். என்னாலும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கை மட்டும் உள்ளது," என்கிறார்.

வாழ்த்த 89400 96380ல் 'ஹலோ' சொல்லலாம்.

தினமலர்
DINAMALAR
22-12-2016 பக்கம் எண்: 3

மதுரை செந்தமிழ் கலைக் கல்லூரியில் மதுரை நான்காம் தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித் துரை தேவரின் 150வது பிறந்த நாள் விழா போட்டிகள் நடந்தன.

முதல்வர் விஜயன் தலைமை வகித்தார். துணை முதல்வர் வேணுகா முன்னிலை வகித்தார். பேச்சு மற்றும் கட்டுரைப் போட்டிகளில் பல்வேறு கல்லூரி மாணவர்கள் பங்கேற்றனர்.

இதில் தியாகராஜர் கல்லூரி மாணவி வெள்ளிமலர் முதல் பரிசும், திருவேடகம் விவேகானந்த கல்லூரி மாணவர் பிரதீப் இரண்டாம் பரிசும், பாத்திமா கல்லூரி மாணவி விஷ்ணு பிரியா மூன்றாம் பரிசும் வென்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**23-12-2016** பக்கம் எண்: 17

# மாணவர்களுக்கு பயிற்சி



போதைப் பொருட்கள் பயன்படுத்தும் மாணவர்களை திருத்துவது மற்றும் போதை பொருள் கடத்தலை தடுப்பது குறித்து போதைப் பொருள் கடத்தல் தடுப்பு பிரிவு அதிகாரி தன்ராஜ் மதுரை தியாகராஜர் கல்லூரியில் என்.சி.சி.மாணவர்களுக்கு பயிற்சி அளித்த போது எடுத்த படம். அருகில் என்.சி.சி.அதிகாரி அருண்நாகேந்திரன் உள்ளார்.

தினமணி
www.dinamani.com
23-12-2016 பக்கம் எண்: 2

# தமிழ் வளர்ச்சித் துறை: மாவட்ட அளவில் கலைப் போட்டிகள்

மதுரை, டிச. 22: தமிழ் வளர்ச்சித் துறை செவ்வாய்க்கிழமை மாவட்ட அளவில் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளை நடத்தின.

மதுரை தியாகராஜர் கல்வியியல் கல்லூரியில் நடைபெற்ற இப்போட்டிகளை தொடக்கி வைத்து, தமிழ் வளர்ச்சித் துறை துணை இயக்குநர் க. பசும்பொன் பேசினார். கல்லூரி முதல்வர் வீ. ராஜயோக்கியம், நிர்வாக அலுவலர் ஆ. குப்புசாமி, உதவிப் பேராசிரியர் ரேணுகாதேவி உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

**போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் விவரம்:**

கவிதைப் போட்டி: முதலிடம் - செ. முத்துப்பிரியா, அமெரிக்கன் கல்லூரி, 2-ஆம் இடம் - கோ.முருகேசன், அரசு சட்டக் கல்லூரி, 3-ஆம் இடம் - சு.சுரேஷ்குமார், தியாகராஜர் கல்லூரி.

கட்டுரைப் போட்டி: முதலிடம் - கு.சரஸ்வதி, மதுரை அரசினர் தொழிற் பயிற்சி நிலையம், 2-ஆம் இடம் - பொ.சார்லஸ் பாபு, தியாகராஜர் கல்வியியல் கல்லூரி, 3-ஆம் இடம் - இரா.நிவேதா, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் கல்லூரி.

பேச்சுப் போட்டி: முதலிடம் ச.அகிலாண்டேஸ்வரி, பாத்திமா கல்லூரி, 2-ஆம் இடம் - அ.பகத்கான், வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, 3-ஆம் இடம் - செ.ஜெர்சிலின், தியாகராஜர் கல்லூரி.

இப்போட்டிகளில் முதல் 3 இடங்களைப் பெற்றவர்களுக்கு முறையே ரூ.10 ஆயிரம், ரூ.7 ஆயிரம், ரூ.5 ஆயிரம் பரிசு வழங்கப்படும். முதலிடம் பெற்ற மாணவர்கள் மாநில அளவிலான போட்டிக்கு பரிந்துரைக்கப்படுவர்.

தமிழால் இணைவோம்
இந்து தமிழ் திசை

25-12-2016 பக்கம் எண்: 4

# மாநகராட்சி பூங்காவை புதுப்பித்த கல்லூரி மாணவிகள்

**மதுரை**

மதுரை அண்ணாநகரில் பொதுமக்களுடன் இணைந்து கல்லூரி மாணவிகள் புதுப்பித்த மாநகராட்சி பூங்காவை ஆணையர் சந்தீப் நந்தூரி திறந்துவைத்தார்.

அண்ணாநகர் மாநகராட்சி பூங்காவை புதுப்பிக்க தியாகராஜர் பொறியியல் கல்லூரி மாணவிகளும், முத்தமிழ் குடியிருப்போர் நலச்சங்க பிரதிநிதிகளும் முன்வந்தனர். இதைத்தொடர்ந்து பூங்காவில் உள்ள நடைபாதையை சீரமைக்கவும், குழந்தைகளுக்கான விளையாட்டு உபகரணங்களைபழுதுநீக்கிவண்ணம் பூசவும், இருக்கைகள், சுற்றுச்சுவரை சீரமைக்கவும் நடவடிக்கை எடுத்தனர். 450-க்கும் மேற்பட்ட பூச்செடிகள் மற்றும் மரக்கன்றுகளை நட்டனர்.

புதுப்பிக்கப்பட்ட பூங்காவை மாநகராட்சி ஆணையர் சந்தீப் நந்தூரி திறந்துவைத்தார்.

அங்கு பூச்செடியை நட்டுவைத்த பின், அவர் கூறுகையில் இதே போன்று பிற பூங்காக்களையும் புதுப்பிக்க விரும்பும் குடியிருப்போர் நலச்சங்கத்தினர், தன்னார்வத் தொண்டு நிறுவனத்தினர் மதுரை மாநகராட்சியை தொடர்பு கொள்ளலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியில், தியாகராஜர் கல்லூரி மாணவிகள் கிறிஸ்டினா, திருநிலா, கீர்த்தனா, ஸ்வேதா, முத்தமிழ் குடியிருப்போர் நலச்சங்க தலைவர் சீனிவாசன், செயலாளர் மாறன், செயற்பொறியாளர் ராஜேந்திரன், உதவிப் பொறியாளர் சோனை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினமணி
www.dinamani.com
26-12-2016 பக்கம் எண்: 4

# தியாகராஜர் கல்லூரி என்.சி.சி. முன்னாள் மாணவர்கள் சந்திப்பு



மதுரை தியாகராஜர் கல்லூரியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற கல்லூரியின் முன்னாள் தேசிய மாணவர் படைப் பிரிவினர்.

**மதுரை, டிச. 25:** மதுரை தியாகராஜர் கல்லூரியின் என்.சி.சி. முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

தியாகராஜர் கல்லூரியில் என்.சி.சி. (தேசிய மாணவர் படைப் பிரிவு) முன்னாள் மாணவர்கள் சங்கத்தின் ஐந்தாம் ஆண்டு விழா நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு, கல்லூரி துணை முதல்வரும், முன்னாள் மாணவர் சங்கச் செயலருமான பேராசிரியர் டி. பாண்டியராஜா தலைமை வகித்தார். இதில், தொலை தொடர்புத் துறையில் பணியாற்றி ஓய்வுபெற்ற அலுவலரும், என்.சி.சி.யின் முன்னாள் மாணவருமான எம். பால்சாமி (74) தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். இக்னோ உதவிப் பதிவாளர் ஆர். முத்தானந்தம் மற்றும் மதுரைக் கல்லூரிப் பேராசிரியர் கோபி ஆகியோர் தங்களது அனுபவத்தை பகிர்ந்து கொண்டனர். என்.சி.சி. மாணவர்களின் நடனம் மற்றும் புதிய ரூபாய் நோட்டு மாற்றத்தால் ஏற்பட்டுள்ள நிகழ்வை மையமாக்கி நாடகமும் நடத்தப்பட்டது.

மாணவர் சந்திப்புக்கான ஏற்பாடுகளை, கல்லூரி என்.சி.சி. படை அதிகாரி பேராசிரியர் அருண் நாகேந்திரன் உள்ளிட்டோர் செய்திருந்தனர்.

## DINAMALAR (தினமலர்)

**26-12-2016** பக்கம் எண்: 3

### உயராய்வு மைய கருத்தரங்கு

மதுரை தியாகராஜர் கல்லூரி தமிழ்த்துறை உயராய்வு மையம் கருத்தரங்கம் உதவி பேராசிரியர் செந்தில் நாராயணன் தலைமையில் நடந்தது. 'கற்கால தமிழகம்', 'பிறப்பியலில் உரையாசிரியரின் உரைத்திறன்' ஆகிய தலைப்புகளில் கட்டுரைகள் வாசிக்கப்பட்டன. பேராசிரியர்கள் கொண்டல்ராஜ், ஞானப்பூங்கோதை ஒருங்கிணைத்தனர். மாணவர் அஜித்குமார் நன்றி கூறினார்.

## DAILY THANTHI (தினத்தந்தி) — வெல்க தமிழ்

**28-12-2016** பக்கம் எண்: 2

